
கோகுலம்


குழந்தைகள் பத்திரிகை
9-6-1974
40 காசு




பண்டைய
நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
அன்றைய குஜராத்தி மரபினைப் பின்பற்றி சேலை அணியும் பாணி இன்று மீண்டும் மங்கையரிடையே உலவத் தொடங்கி உள்ளது. அதுவும் அணிந்திடும் சேலை மபத்லாலின் 'மெ:ப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலையாக இருக்குமே எனில், அழகு முழுமை பெற்று முறுவலிக்கிறது!
'மெ:ப்ரின்' பாலியெஸ்டர் சேலைகள் பண்டைய கற்பனைகளுக்கு, நவீன ஒயிலோடு கூடிய வண்ணம், வடிவம் மற்றும் நெசவின் நேர்த்தியை கலந்திழைத்து, கிளர்ச்சியூட்டும் மறுமலர்ச்சியை அளிக்கின்றன!
மபத்லால் க்ரூப் அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்

பட்டுவும் பஞ்சுவும் 4





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்

— பாரதியார்

கோகுலம்

மலர் 3 □ இதழ் 5

ஜூன் 9, 1974

ஆனந்த, வைகாசி 26

□

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம்	ரூ. 10-00
ஆறு மாதம்	ரூ. 5-00

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031



அட்டைப்படப் பெண்:

ஒளிஞ்சிருக்கும்
பேர்களெல்லாம்
ஓடிவாருங்கோ

ஒருத்திமட்டும்
ஒளிஞ்சிருப்பேன்
தேடிப்பாருங்கோ

வண்ணப்படம்:
ஆர். முத்துசாமி
(உஷா)

பிள்ளையார் பெருமை

சிந்தாமணி விநாயகர்

தமிழகத்திலே அபிசித்து என்ற மன்னன் அரசு புரிந்து வந்தான். அவன் மனைவி குணவதி. மன்னவன் மகப்பேறின்றி மனைவியுடன் தவஞ் செய்யக் கானகம் அடைந்தான்.

வைசம்பாயனர் என்ற முனிவரைச் சந்தித்து அவரை அன்புடன் அஞ்சலித்துத் தன் குறையைக் கூறினான். வைசம்பாயனர் அவனுக்குச் சிவ பஞ்சாட்சரத்தை உபதேசித்தார். ''அரசனே! கடலுடன் நதி கலக்கும் இடத்துக்கு மேற்புறத்தில் ஒரு காடு உள்ளது. அங்கே ஒரு தடாகம் உள்ளது. அங்கு போய் நான்கு மாதங்கள் தவம் செய். உனக்கு மகப்பேறு கிடைக்கும்'' என்று கூறி ஆசீர்வதித்தார்.

அரசன் மனைவியுடன் அங்கு சென்றான். அந்த இடத்தில் பிரமதேவர்



சரஸ்வதியுடன் தவஞ் செய்துகொண்டிருந்தார். ஆகவே அந்தத் தடாக நீருக்குத் தெய்வத் தன்மை இருந்தது.

தன் கணவருடன் தவம் செய்ய வந்த அபிசித்து மன்னனின் மனைவி அக் குளத்து நீரைப் பருகினாள். பிரமதேவரின் அருள் பெற்ற நீரானதால் அவள் கருவுற்றாள். அபிசித்து தன் மனைவியுடன் நான்கு திங்கள் கழித்துத் தன் நகரத்தை அடைந்தான். குணவதி கணன் என்ற மகனைப் பயந்தாள். அவன் பிரம்மாவின் அருளால் பிறந்தவன் ஆதலால் அளவிலா ஆற்றல் உடையவனாக வளர்ந்தான். திடீரென்று பாய்ந்து சந்திர மண்டலம் சென்று சந்திரனுடைய கை பற்றிக் குலுக்குவான். யானை புலி சிங்கங்களை ஒரு நொடியில் அடக்குவான்.

அவன் வயது வந்த பின் பெருந் தவஞ் செய்தான். அந்தத் தவத்தீ விண்ணுலகத்தை வெதுப்பியது. அமரர்கள் அஞ்சினார்கள். ஆலமுண்ட நீலகண்டப் பெருமான் அவனுடைய தவத்துக்கு இரங்கிக் காட்சி தந்தருளினார். கணன் கண்ணுதற் கடவுளை வணங்கிப் பல வரங்களைப் பெற்றான்.

அபிசித்து கணனுக்குத் திருமணம் செய்து வைத்தான். மகனுக்கு முடி சூட்டிவிட்டு அபிசித்து சிவபூசையில் ஈடுபட்டிருந்தான். கணனுக்குச் சூலபாணி, கலபன் என்று இரு மைந்தர்கள் பிறந்தார்கள். கணன் செம்மையாக அரசாட்சி புரிந்தான்.

கணன் தன் மைந்தர்களாகிய சூலபாணி, கலபன், தன் மதி மந்திரிகளாகிய விகவசித்து, பிரமதன், கிரந்தன், விதந்து என்ற நால்வர்களையும் நால்வகைச் சேனைகளையும் அழைத்துக் கொண்டு திக்விஜயம் செய்தான்.

எல்லா அரசர்களும் அவனுக்கு அடங்கிக் கப்பம் கட்டலானார்கள். இந்திர உலகம் போய் இந்திரனுடைய உச்சைச்சிரவம் என்ற குதிரையைக் கைப்பற்றிக் கொண்டான். இந்திரன் போர் புரிந்து தோல்வியுற்றான். கணன் இந்திரனைக் கருணையுடன் ''உன் ஆட்சியைச் செய், ஆனால் எனக்கு அடங்கி இரு'' என்று கட்டளையிட்டான். பிரமலோகம், வைகுண்டம் முதலிய உலகங்களுக்குச் சென்றான். பிரம்மாவும் திருமாலும் கூட அவனுடன் சமாதானம் செய்து கொண்டார்கள். அவர்கள் தந்த சிறந்த பொருள்களுடன் தன் நகரை அடைந்து பிதாவை வணங்கி, தன் வெற்றித் திறத்தை விளம்பி அரசு புரிந்து வந்தான்.

கணன் தன் பரிவாரங்களுடன் ஒரு நாள் வேட்டைக்குச் சென்று களைத்தான். கபில முனிவருடைய ஆசிரமத்தை அடைந்தான். கபிலர் அவனை அன்புடன் வரவேற்று, ''அன்பனே! நீங்கள் பசியால் களைத்திருக்கிறீர்கள். உணவு செய்யுங்கள்'' என்றார்.

இந்திரன் முன் ஒரு சமயம் அவரிடம் உணவு உண்டு கபிலருக்குத் தனது

சிந்தாமணியைக் காணிக்கையாகத் தந்திருந்தான்.

கபிலர் அந்தச் சிந்தாமணியால் உணவுக் கூடத்தை உண்டாக்கி அத்தனை பெருக்கும் தேவாமுதம் போன்ற உயர்ந்த உணவு தந்தார். கணன் சிந்தாமணியைத் தனக்குத் தருமாறு கேட்டான். ''இது இந்திரன் தந்த பரிசுப் பொருள். இதனை நீ விரும்பாதே'' என்றார். கணன் பலாத்காரமாக அவரிடமிருந்து சிந்தாமணியைப் பறித்துக் கொண்டு சென்றான்.

கபிலர் கணபதியை வேண்டித் தவஞ் செய்தார். கணபதி சித்தி புத்திகளுடன் காட்சி தந்தார். ''அன்பனே! நீ அஞ்சாதே. நாம் கணனைக் கணப்போதில் மாய்த்தருளுவோம்'' என்று அருள் புரிந்து அங்கு எழுந்தருளியிருந்தார்.

கணன் தீக் கனவுகள் கண்டான். கபிலர் தமது படையுடன் போருக்கு வந்ததாகவும் கபிலருடன் வந்த ஒருவன் மழுவாயுதத்தால் தன் தலையை வெட்டியதாகவும் கனவு கண்டான்.


கணன் மறுநாள் கபிலரைக் கொல்லும் பொருட்டுப் படையுடன் புறப்பட்டான். அவனுடைய தந்தையாகிய அபிசித்து தடுத்தார். ''மகனே! பெரியோர்களைப் பகைத்தவன் அழிந்து போவான். நீ மற வழியில் செல்லாதே'' என்றார். கணன் தந்தை சொல்லைத் தட்டிக் கபிலருடைய வனத்தை அடைந்தான்.

கணேசருடைய சக்தியாகிய சித்தி தேவியார் போருக்கு வந்தார். அவர் இலட்சம் கரங்களையுடைய ஒரு வீரனைத் தோற்றுவித்தார். இலக்கன் என்ற அந்த வீரன் கணனுடைய சேனைகளை அழித்து அவனுடைய புதல்வர்களைப் பிடித்துக் கொண்டு போய் நிறுத்தினான்.

கணன் பெரிதும் சீற்றமடைந்தான். விநாயகர்மீது கடும் படைகளை ஏவிப் போரிட்டான். விநாயகர் அவன்மீது தம் மழுப் படையை ஏவினார். அதனால் உலகமே நிலை கலங்கியது. கணன் மாண்டான்.


அபிசித்து வந்து வருந்தி மகனிடம் இருந்த சிந்தாமணியைக் கபிலரிடம் தந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். தன் பேரக் குழந்தைகளாகிய சூலபாணியையும் கலபனையும் அழைத்துக்கொண்டு சென்றான். அவர்களுக்கு முடிசூட்டினான்.

கபிலர் சிந்தாமணியை விநாயகருக்குச் சூட்டி வழிபாடு செய்தார். அதனால் ''சிந்தாமணி விநாயகர்'' என்றும், கபிலர் வழிபட்டதால் ''கபில விநாயகர்'' என்றும், மலர்ந்த முகத்துடன் விளங்குகிறபடியால் ''சுமுக விநாயகர்'' என்றும் பெயர் பெற்றார்.



வெள்ளை எருமை

விகேயெம்




இன்றைய அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களில் எத்தனையோ இனங்கள் உண்டு. அதில் ஓர் இனத்தவர்கள் ஒநாய் இந்தியர்கள். இவர்கள் தெய்வமாக வழிபடுவது வெள்ளை எருமையை. இன்றும்கூட வெள்ளை எருமையைப் போற்றும் ஐதீகப் பாடல்களும், நாட்டியங்களும் ஒநாய் இந்தியர்களிடையே நிலவி வருகின்றன. வெள்ளை எருமை எப்படி இந்த இனத்தின் வணக்கத்துக்கு உரியதாகியது ? அது ஒரு சுவையான கதை:

விஸாகா சின்னக் குழந்தையாக இருந்தபோது ஒருநாள் அவளை அவள் அம்மா தனது முதுகிலே உள்ள தூளியில் கட்டிக் கொண்டு பெர்ரி என்ற பழங்களைச் சேகரிக்கக் கானகத்துக்குப் போனாள். செவ்விந்தியர்கள் தங்கள் குழந்தைகளை இடுப்பில் தூக்கிக் கொண்டு போகமாட்டார்கள். தோலால் ஆன ஒரு வகை பை போன்ற அமைப்பில் குழந்தையை வைத்துத் துணியில் கட்டி அதைத் தங்கள் முதுகில் சுமந்து கொண்டு போவார்கள். நன்கு கட்டப்பட்ட குழந்தை அந்தத் தூளியில் இருந்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டே வரும்.

பழங்களைத் தேடிக் காட்டுக்குள் வெகுதூரம் போய்விட்டாள் விஸாகாவின் அம்மா. அவள் இனத்தவரின் குடியிருப்பிலிருந்து விலகி வெகு தொலைவுக்குப் போய்விட்டதினால் அவளுக்குத் திரும்பும் வழி தவறிப் போயிற்று. அதே சமயம் இருட்டவும் ஆரம்பித்து விட்டது. தன் கிராமத்துக்குத் திரும்பி விட வெகுநேரம் முயன்றாள். களைப்புத்தான் ஏற்பட்டது, கானகத்தில் வழி தெரியவில்லை. குழந்தையை முதுகிலிருந்து அவிழ்த்துத் தன் அருகே போட்டு அணைத்துக் கொண்டு திறந்த வெளியில் அப்படியே படுத்துத் தூங்கிப் போனாள்.

பகல் முழுதும் அலைந்த அலுப்பில் அயர்ந்து தூங்கியவள் அதிகாலையில் தான் கண் விழித்தாள். அப்போது அவளுக்கு ஓர் அதிர்ச்சி தரும் காட்சி காத்திருந்தது. அவளையும் அவள் குழந்தை விஸாகாவையும் சுற்றி எருமைகளாகச் சூழ்ந்திருந்தன. எல்லாம் காட்டெருமைகள். நாலாபுறமும் நடுக்கத்துடன் நோக்கினாள். எங்கும் வழியே இல்லை. அப்படி நெருக்கமாக அடைத்துக் கொண்டு சூழ்ந்திருந்தன எருமைகள். அமெரிக்கக் காட்டெருமைகள் ஆக்ரோஷம் மிக்கவை. ஒரு சிறு அதிர்ச்சியும் அவைகளை வெறி கொள்ள வைத்துவிடும். அவைகள் தலையைத் தாழ்த்திக் கொண்டு ஓடி வரும்போது எதுவுமே அவைகளைத் தடுத்து நிறுத்த முடியாது. அத்தனை ரோஷமும் பலமும் கொண்டவை அந்தக் காட்டெருமைகள். அவைகளின் அமைதியைக் கெடுப்பது எத்தனை ஆபத்து என்பதை அவள் அறிவாள். ஆகவே மெதுவாக, கவனமாகச் செயல்பட்டாள். குழந்தை இன்னமும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. நடுங்கும் கைகளால் தூளியை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டாள். எருமைகள் செழித்து வளர்ந்துள்ள புற்களைச் சுவாரசியமாக மேய்ந்து கொண்டிருந்தன. தம்மிடையே ஒரு

பெண் இருப்பதையே அவைகள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு தட தடக்கும் இதயத்துடன் அந்தப் பெண் மெள்ள ஓர் அடி எடுத்து வைத்தாள். அடுத்து ஓர் அடி, அதையடுத்து மற்



றென்று.... எருமைகள் அவளது சலனத்தைக் கவனித்ததாகவே தெரியவில்லை. அவைகளிடையே கவனமாகப் புகுந்து நெளிந்து நகர்ந்தாள் அவள். தப்பித் தவறி ஓரிரு முறை அவற்றின் உடல் மீது இடிக்க நேரும். அப்போது அந்த எருமை தனது மேய்ச்சலை நிறுத்தி விட்டுத் தலை நிமிர்ந்து அவளைப் பார்க்கும். அந்த விநாடி அவள் இதயமே நின்றுவிடும். ஆனால் எருமையோ தம்மிடையே புகுந்து நடக்கும் அந்நியரைப் பற்றி அதிகம் அக்கறை கொள்ளாமல் மறுபடியும் புல் மேய்வதில் கவனம் செலுத்தும். தைரியசாலியான அந்தப் பெண் எப்படியோ உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எருமைக் கூட்டத்தின் நடுவிலிருந்து மெள்ள மெள்ள நழுவி ஒருவழியாகத் திறந்த பரந்தவெளிக்கு வந்துவிட்டாள். இப்போதுதான் அவளால் சரியாக மூச்சு விட முடிந்தது. திரும்பிப் பார்த்த போது கண்ணுக்கு எட்டியவரை காட்டெருமைக் கூட்டம். சற்று முன்பு அவைகளின் மத்தியில்தான் இருந்ததை நினைத்ததும் பயத்தினால் அவள் உடல் வியர்த்துக் கொட்டியது.

'அப்பாடா!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். ஆனால் அவளை விட்டு இன்னும் அபாயம் நீங்கவில்லை. அந்த அமைதியான காலை வேளையைக் கலகலக்க வைத்தது ஸியாக்ஸ் இந்தியர்களின் யுத்த கோஷம். ஒநாய் இனத்தவரை ஜன்மவிரோதிகளாக மதிப்பவர்களாயிற்றே ஸியாக்ஸ் இனத்தவர். தன்னையும் தன் குழந்தையையும் கண்டே அவர்கள் அப்படி வெறிக் கூச்சலுடன் ஓடி வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டாள் விஸாகாவின் தாய். தனது முடிவு நிச்சயம் என்பதை உணர்ந்து கொண்ட அவள் ஓடவில்லை. அப்படியே சிலையாக நின்றுவிட்டாள். உடல் எங்கும் வண்ணக் கோலமிட்டுக் கொண்டுள்ள ஸியாக்ஸ் வீரர்கள் அவளை நோக்கி ஓடி வந்தார்கள் ஈட்டியைத் தூக்கியபடி.

ஒரு ஸியாக்ஸ் வீரன் அவளைக் கொல்ல அவள் அருகே பாய்ந்து வந்தான். அதே சமயம் அந்தப் பெண்ணின் கால்களின் கீழே பூமி நடுங்குவதையும் அதிர்வதையும் உணர்ந்தாள். ஸியாக்ஸ்களின் யுத்தவெறிக் கூச்சலையும் மீறிக் கொண்டு இடியோசை போல் தடதடவென்ற ஒலி எழுந்தது. அவளை நோக்கி ஓடி வந்த விரோதிகள் பீதி அடைந்து நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். காட்டெருமைக் கூட்டம் வெள்ளமென, நின்று கொண்டிருக்கும் அவளை மையமாக்கி அவளுக்கு இருபுறமும் பிரிந்து சென்று ஸியாக்ஸ் வீரர்களை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தன. அவைகளின் தாழ்த்திய தலைகளின் தாக்குதலுக்குத் தப்பித் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்தார்கள் அத்தனை பேரும். ஓட முடியாதவர்கள் எருமைகளினால் தாக்கப்பட்டு நசுங்கினார்கள், கிழித்து எறியப்பட்டார்கள்.

சில மணி நேரங்களில் அத்தனை எருமைகளும் ஸியாக்ஸ் வீரர்களை ஹதாஹதம் செய்துவிட்டு இடம் பெயர்ந்து போயின. இதற்குள் ஒநாய் இனத்தவர்களில் சிலர் காணமல் போன தங்கள் பெண்ணைத் தேடி வந்து அவளைக் கண்டு தங்கள் இடத்துக்கு அழைத்துப் போனார்கள். விஸாகாவின் தாய்

நடந்த அதிசயங்களைத் தன் கணவனிடம் விவரித்தாள். அவன் தன் மனைவியைக் கிராமத்தின் முதியவரும் அறிவாளியுமான பெரியவர்களின் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தி நடந்தவைகளை மறுபடியும் கூறச் செய்தான். கவனமாகக் கேட்ட அவர்கள் அவனுடைய மகன் இயற்கையை வெற்றி கொள்ளும் தெய்விகச் சக்தி மிக்கவனாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். காட்டெருமைகளிடையே அவள் பத்திரமாக வந்ததற்கும் விரோதிகளை அந்த எருமைகள் விரட்டி அடித்ததற்கும் விஸகாவினிடமுள்ள அபூர்வமான சக்திதான் காரணம் என்றார்கள்.

நாளடைவில் விஸாகா வளர்ந்து சிறந்த வீரனானான். தன் இன மக்களால் மதிக்கப்பட்டவனாக விளங்கினான். அவனுடைய உதவியையும், ஆலோசனையையும் நாடி எல்லோரும் வந்தார்கள். எல்லாருக்கும் எப்போதும் உதவும் நல்லவனாக விளங்கினான் விஸாகா. அவனுடைய காரியங்களுக்கெல்லாம் ஒரு வெள்ளை எருமை உதவி வந்தது.

ஒரு சமயம் ஒநாய் இனத்துக் குழந்தை ஒன்று கொடிய நோயினால் இறக்கும் நிலையில் அவனிடம்கொண்டு வரப்பட்டது. பிழைக்கும் என்ற நம்பிக்கை இழந்த நிலையில் விஸாகா மௌனமாகக் கிராமத்தைத் தாண்டி இருந்த மலை உச்சிக்குப் போனான். சிறிது நேரம் தன்னந் தனியாக நின்றான். மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு கம்பீரமான பெரிய வெள்ளை எருமை அவனை நோக்கி வந்தது. இருவரும் கொஞ்ச நேரம் ஏதோ பேசிக் கொண்டனர். பிறகு விஸாகா ஒரு பச்சிலையுடன் கீழே இறங்கி வந்தான். அதை அந்தக் குழந்தைக்குக் கொடுத்த சில நிமிஷங்



"குதித்து விட்டோம் கடலிலே!"

புகைப்படம்: வித்யாஸ்ரதா



"குழாய்த் தண்ணி போதாது....."

புகைப்படம்: ஆர். சேகர்



"குளம் குட்டையும் பத்தாதுன்னு..."

புகைப்படம்: வி. எம். ஓமர்

களில் இறந்து கொண்டிருந்த குழந்தை எழுந்து உட்கார்ந்து கொண்டு சிரித்தது. வெள்ளை எருமையை விஸாகா சந்தித்தபோது அவனுக்கு ஒரு மகத்தான சக்தியை வழங்கியது அது. அவன் விரும்பும்போது மனித உருவை விட்டு வெள்ளை எருமையாக மாறலாம். பிறகு மறுபடியும் மனிதனாகலாம் என்பதே அந்தச் சக்தி.

பல ஆண்டுகள் விஸாகாவின் தலைமையிலும் பாதுகாப்பிலும் ஒநாய் இனத்துச் செவ்விந்தியர்கள் நிம்மதியாகச் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். ஸியாக்ஸ் இந்தியர்கள் இவர்களை இப்படி நிம்மதியாக இருக்க விடவில்லை. ஒநாய் இனத்தவரின் வேட்டை நிலங்களைத் தங்களுடையதாக்கிக் கொண்டு வம்புக்கு இழுத்தார்கள். ஒநாய் இனத்தவர், பேய்க் குணம் கொண்ட ஸியாக்ஸ்களைக் கண்டு நடுங்கினார்கள். அவர்களிடம் ஏராளமாக ஆயுதங்கள் இருந்தன. படை பலமும் கொண்டவர்கள். விஸாகா தம் மக்களைத் தைரியப்படுத்தினான். விரோதிகள் எப்படி எந்தத் திசையிலிருந்து தாக்குவார்கள் என்பதைத் தன் அபூர்வ சக்தியால் அறிந்து அதற்கேற்றபடி அவர்களை எதிர்த்துப் போரிடத் தம் மக்களை அனுப்பி வைத்தான் யுத்த களத்துக்கு.

தங்கள் தலைவனின் யோசனைப்படி ஒநாய் இனத்தவர் ஸியாக்ஸ் இனத்தவரை எதிர்த்தார்கள். ஆரம்பத்தில் எதிரிகளில் பலரை வீழ்த்தினர். ஆனால் விரோதிகளின் எண்ணிக்கையோ அதிகம். எத்தனை நேரம்தான் சமாளிக்க முடியும்? பின்வாங்கும்படி நேரிட்டது. தன் வீரர்களைப் போர்க்களத்துக்கு அனுப்பினானே தவிர தலைவனை

''அம்மாடி! இந்த ஆற்று நீர் தான் எத்தனை ஜில்லுனு இருக்கு!''





'' உஸ், அப்பாடா! ஓடியா. அதோ வேங்கைப்புலி விளையாடற ஆற்று நீரிலே போய் விழுவோம். அப்பத்தான் உடல் எரிச்சல் ஒழியும்.

புகைப்படங்கள்:
எல்லிஸ். ஆர். டங்கன்



ஓ! அப்படியா?



கீட்டு : மரமே, மரமே! ஆறு மாதங்களுக்கு முன்னால் உன்னைப் பார்த்தபோது பட்டுப் போகும் நிலையில் இருந்தாயே? இன்று 'பசேல்' என்று ஆரோக்கியமாக இருக்கிறாயே, இது எப்படி?

மரம் : உங்களுக்கெல்லாம் நோய் வருவதில்லையா? அப்படித்தான் எங்களுக்கும். லார்வா என்றால் தெரியுமில்லையா, உங்களுக்கு?

கீட்டு : தெரியுமே. பூச்சிகளின் புழு வடிவத்துக்கு லார்வா என்று பெயர்.




மரம்: இத்தகைய புழுக்கள் எங்களுடைய பட்டைகளுக்குள் புகுந்து ஏராளமாக உற்பத்தியாகி விடுவதுண்டு. இந்தப் புழுவினால் தாக்கப்பட்ட நோயாளியாகி விடும் எங்களுக்கு உடனே வைத்தியம் செய்யாது போனால் நாங்கள் செத்துத்தான் (பட்டு) போவோம். உங்களுக்கு வைத்தியம் செய்ய டாக்டர் இருப்பது போல் எங்களுக்கும் டாக்டர் உண்டு. அவர்தான் மரங்கொத்தியார். அவர் வந்து எங்களைச் சோதித்து என்ன நோய் என்பதைக் கண்டு பிடித்து விடுவார். மரப்பட்டைக்கடியில் லார்வா (புழு) எங்கெங்கு இருக்கிறது என்பது வைத்தியரான அவருக்குத்தான் தெரியும். மரத்தில் துளை போட்டுப் புழுக்களை வெளியே இழுப்பார். எங்கள் நோயும் மறையும். பிழைத்துக் கொள்ளுவோம்.

விஸாகா தான் நேரடியாகச் சண்டையில் ஈடுபடவில்லை. தோல்வியினால் மனமுடைந்து திரும்பிய தம் வீரர்களிடம் "நீங்கள் திறமையாகவே போரிட்டீர்கள். பின்வாங்க நேரிட்டதற்காக வேதனையோ வெட்கமோ படவேண்டியதில்லை. ஸியாக்ஸ்களை நான் தனியாகவே விரட்டி வெற்றி கொண்டு வருகிறேன். கவலைப்படாமல் இருங்கள்" என்றான்.

எவ்வித ஆயுதமும் இல்லாமல் தன்னந் தனியனாகத் தங்கள் தலைவனை விஸாகா, வெறியோடு காத்திருக்கும் ஸியாக்ஸ் கூட்டத்தினரை நோக்கிப் போவதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள் ஒநாய் இந்தியர்கள். விரோதிகளை நெருங்கியதும் விஸாகாவிடமிருந்து ஒரு வீர கர்ஜனை கிளம்பியது. எதிரிகளை நோக்கிப் பாய்ந்தான். அதே சமயம் அவன் உடல் கம்பீரமான ஒரு வெள்ளை எருமையாக மாறியது. பூதாகாரமான உடல். அதன் மூக்கிலிருந்து கிளம்பிய மூச்சுக் காற்று புயலாகச் சீறியது. பூமியில் பதியும் அதன் காலடிகள் இடியோசை போல் இருந்தன. அத்தனை பெரிய பிரும்மாண்டமான வெள்ளை எருமையை அது 'வரை யாரும் பார்த்ததே இல்லை.

ஸியாக்ஸ் இனத்தவர் அம்பும் வேலும் ஈட்டியும் கொண்டு வீராவேசமாக அந்த எருமையை எதிர்த்தார்கள். ஆனால் அவர்களுடைய எந்த ஆயுதமும் அந்த வெள்ளை எருமையை எதுவும் செய்ய முடியவில்லை. ஆனால் அதன் தாக்குதலுக்கு ஆட்பட்டவர் எவரும் உயிர் தப்பவில்லை. ஸியாக்ஸ் இனத்தவர்களில் பெரும்பாலோரை முட்டி மோதிக் கிழித்துக் காலால் துவைத்து நாசமாக்கியது. பீதியும் தோல்வியும் கண்டவர்கள் தலைதெறிக்க ஓடினார்கள் தங்கள் பகுதிக்கு.

விரோதிகளை விரட்டி அடித்த விஸாகா மறுபடியும் மனித உருவத்தை அடைந்து தம் மக்களிடம் திரும்பி வந்தான். அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். அவனுடைய பாதுகாப்பில் சௌக்கியமாக வாழ்ந்தார்கள். விஸாகா நீண்ட நாட்கள் ஆரோக்கியமான வாழ்க்கை நடத்தினான். ஆனால் எல்லோரையும் போல அவன் இறக்கவில்லை. ஒருநாள் தன்னுடைய இருப்பிடத்திலிருந்து அவன் மறைந்து போனான். அதன் பிறகு அவனை யாரும் பார்க்கவில்லை. ஆனால் அன்றிலிருந்து ஒநாய் இனத்துச் செவ்விந்தியர்கள் வாழும் இடத்துக்கு அருகில் எப்போதும் ஒரு வெள்ளை எருமை காணப்பட்டது. தங்களுடைய காவல் தெய்வமாக அதைக் கருதலானார்கள், ஒநாய் இனத்துச் செவ்விந்தியர்கள்.



நிம்மி வீட்டு நாவல் மரம்

ஆர். ரங்கராஜன்

நிம்மி வீட்டில் நாவல் மரம் ஒன்று இருந்தது. வருடா வருடம் மே, ஜூன் மாதங்களில் நிறையப் பழங்கள் கொடுக்கும். நிம்மிக்கு அந்த மரத்திடம் தனிப் பாசம். அன்று நிம்மி கவலையுடன் அந்த மரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கவலைக்குக் காரணம் இருந்தது. அவள் பெற்றோர்கள் கடன் தொல்லை காரணமாக அந்த வீட்டை வேறு ஒருவருக்கு விற்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் சில நாட்களில் வீட்டை வாங்கப் போகிறவர்கள் அங்கு குடி வந்து விடுவார்கள். நாவல் பழங்களை அவர்கள் தின்று அனுபவிப்பார்கள். நாவல் மரத்தைப் பிரியவே நிம்மிக்குக் கஷ்டமாக இருந்தது.

தன் நிழலில் நிம்மி கவலையுடன் தன் கீழே உட்கார்ந்திருப்பதை நாவல் மரம் பார்த்தது. அவளுடைய கவலை அதற்கும் தெரிந்தேயிருந்தது. அதற்கு ஒரு யோசனை தோன்றியது. முடிந்த அளவு நிறையப் பழங்களைத் தான் கொடுத்தால் அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அவர்கள் கஷ்டத்தைத் தீர்த்துக் கொள்ளட்டும் என்பதுதான் அதனுடைய திட்டம். ஆகவே அந்த வருஷம் அது சீக்கிரமாகவே காய்க்கத் தொடங்கிவிட்டது. ஆனால் நிம்மிக்கு மகிழ்ச்சியை விடத் துக்கமே அதிகமாக இருந்தது. காரணம் எந்த வருடமும் இல்லாத அளவுக்கு இந்த வருடம் ஏராளமாகப் பழங்களைத் தந்திருக்கும் இந்த மரத்தைப் பிரிய வேண்டுமே என்ற கவலைதான் அது. தவிர, பழங்களை விற்ற காசு வீட்டுச் செலவுக்குத்தான் சரியாக இருந்தது. கடனைத் தீர்க்க முடியவில்லை.

அந்த வருடம் நாவல் பழக் காலம் முடிந்து விட்டது. இனிமேல் அடுத்த வருடம்தான் காய்க்கும். 'வருடம் முழுதும் காய்க்கும் சக்தியைக் கொடுத்திருந்தால் நிம்மி வீட்டாருக்கு எவ்வளவு உதவி செய்யலாம்' என்று எண்ணியது நாவல் மரம்; அந்தத் துக்கத்தில் வேர் அனுப்பிய நீரைக்கூட மேலே இழுத்துக் கொள்ளாமல் இருந்து விட்டது.

''என்ன, இன்னிக்கு நீர் வேண்டாமா?'' என்று தரையிலிருந்தபடியே இலைகளைக் கேட்டது வேர். இலைகள் தண்டின் மூலம் அவற்றின் கவலையைச் சொல்லி யனுப்பியது. வேர் அண்ணன் சிறிது நேரம் சிந்தித்தது. பூமிக்குள் அங்கு மிங்குமாகப் போய்க் கொண்டிருந்தபோது ஏதோ நெருடியது. பிறகு பார்த்தால் அது ஒரு மண் பானை! அதற்குள் என்ன இருக்கும் என்று பார்த்த வேருக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. ஆம். அந்தப் பானைக்குள் நிறையப் பொற் காசுகள் இருந்தன. உடனே செய்தியை மேலே அனுப்பியது. இலைகளுக்குக் குஷி தாங்கவில்லை. 'புதையலைக் கொடுத்து நிம்மியின் கவலைகளைப் போக்கிவிட வேண்டும். அதோ நிம்மி வருகிறாள். அவளிடம் சொல்ல வேண்டும்.' ஆனால் எப்ப



டிச் சொல்வது? அதனால் பேச முடியாதே! இலைகளை வேகமாக அசைத்து ஜாடை செய்தது. அப்படியும் நிம்மிக்குப் புரியவில்லை. சற்று நேரம் காற்று வாங்கிவிட்டு உள்ளே போய்விட்டாள் அவள்.

நாவல் மரத்துக்கு ஒரே வருத்தம். அதற்கு மட்டும் மனிதர்களுடன் பேசும் சக்தி இருந்தால்? நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டது. நிம்மி அப்போது அப்பாவைத் தேடிக் கொல்லைப் பக்கம் வந்தாள். ''அப்பா! அப்பா! இன்னும் இரண்டு நாட்களில் புயல் வீசப் போகுதாம். ரேடியோவிலே சொன்னாங்க'' என்றாள். ''அப்படியா?'' என்று கேட்டுவிட்டு அவர் நிம்மியையும் அழைத்துக் கொண்டு உள்ளே போய் விட்டார்.

நாவல் மரத்துக்கு மின்னல் வேகத்தில் ஒரு யோசனை தோன்றியது. புயல் வீசுவதற்காகக் காத்திருந்தது. அன்று இரவு பலத்த காற்று அடித்தது. ஜன்னல் மூலம் மழையையும் காற்றையும் வேடிக்கை பார்த்த நிம்மி, ''அம்மா! அப்பா! ஓடி வாங்களேன். நம்ம நாவல் மரம் பேய் மாதிரி பலமாக ஆடிக்காண்டிருக்கிறது'' என்று கத்தினாள். அம்மாவும் அப்பாவும் அவள் குரல் கேட்டு ஓடி வந்தனர். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நாவல் மரம் வேரோடு தரையில் சாய்ந்தது. நிம்மியும் அவள் பெற்றோர்களும் அடைந்த வருத்தம் சொல்லி முடியாது. மறுநாள் விடிந்ததும் விடியாததுமாக மூவரும் அதனருகே சென்று பார்த்தனர். ''அம்மா! இங்கே வாருங்களேன். இங்கே ஒரு பானை இருக்கு'' என்று நிம்மி கத்தினாள். அம்மாவும் அப்பாவும் அதைப் பார்த்தனர். உள்ளே பார்த்த அவர்கள் கண்கள் வியப்பால் விரிந்தன. ''பார்த்தீங்களா, கடவுள் கண்ணைக் திறந்துட்டாருங்க. நம்ம கஷ்டம் விடிஞ்சதுங்க'' என்று அம்மா அப்பாவிடம் மகிழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்பா குதி போட்டுக் கொண்டிருந்தார். இருவரும் மரத்தை மறந்தே விட்டனர். நிம்மி அழுததைப் பார்த்ததும்தான் மரத்தின் நினைவே வந்தது.

''அழாதே, நிம்மி! ஆசையாய் வளர்த்த மரம் நமக்குச் செய்த உதவிக்கு நன்றியாக அதற்குப் பக்கத்திலேயே இன்னொரு மரம் வளர்ப்போம்'' என்று ஆறுதல் கூறினர்.

தன்னை வளர்த்தவர்களுக்கு உதவி செய்ய ஒரு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்த நாவல் மரம் நிம்மதியாக அசையாது கீழே கிடந்தது.



சாதுரிய மந்திரி

அம்பா மூர்த்தி

மராத்திய மன்னர்களுக்கு அமைச்சராக விளங்கியவர் நானாபத்னவிஸ். அவர் மிகுந்த மதியூகி. அவர் தமது புத்திசாதுரியத்தால் அரசுக்கு ஏற்பட்ட பலவிதப் பிரச்னைகளையும் வெற்றிகரமாகத் தீர்த்து வந்தார்.

ஒரு சமயம் அரபு நாட்டுக் குதிரை வியாபாரி ஒருவன் தர்பாருக்கு வந்தான். அவனோடு இரண்டு குதிரைகளையும் கொண்டு வந்திருந்தான். ஒரே மாதிரியாக இருந்த அந்த இரண்டு குதிரைகளும் அழகாகக் கம்பீரத்தோடு விளங்கின. மன்னர் அவற்றின் அழகில் மயங்கினார். எப்படியாவது அவற்றை வாங்க முடிவு செய்தார். அந்த வியாபாரியோ வெறும் பணத்துக்காக அவற்றை விற்கத் தயாராக இல்லை. அவன் மன்னரைப் பார்த்து, ''அரசே! இந்தக் குதிரைகளை நான் என் குழந்தைகளைப் போல் வளர்த்திருக்கிறேன். மிகுந்த புத்திசாதுரியம் படைத்தவை இவை. வெறும் பொன்னாசை கொண்டு இவற்றை நான் விற்கப் போவதில்லை. நான் பல ராஜ்யங்களுக்கும் சென்று வந்திருக்கிறேன். பல மன்னர்கள் என் குதிரைகளை வாங்க ஆசைப்பட்டனர். ஆனால் என் குதிரைகளை நன்கு பயன்



படுத்தத் தெரிந்த புத்தி சாதுரியமுள்ள நாட்டுக்கு மட்டுமே விற்பதென்று தீர்மானமாக முடிவு செய்திருக்கிறேன்'' என்றான்.

''சரி வணிகரே! எங்கள் நாட்டின் புத்திசாதுரியத்தை எப்படி நீர் நிர்ணயிக்கப் போகிறீர்?'' என்றார் சேனாபதி.

அதற்கு அந்த வியாபாரி, ''நான் அதற்காக ஒரு சிறிய பரீட்சை வைத்து வருகிறேன். நான் கொண்டு வந்திருக்கும் ஒரேமாதிரியான இந்த இரண்டு குதிரைகளில் ஒன்று தாயும், மற்றது அதன் குட்டியுமாகும். இவற்றுள் எது தாய், எது குட்டி என்று எந்த நாட்டிலே கண்டுபிடிக்கிறார்களோ, அந்த நாட்டு மன்னருக்கே குதிரையை விற்பேன்...'' என்றான்.

சபையிலிருந்த எல்லோரும் இரண்டு குதிரைகளையும் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தார்கள். அவற்றுள் வித்தியாசமே கண்டுபிடிக்க முடியவில்லை. எல்லோருடைய கண்களும் நானா பத்னாவிஸின்மீது திரும்பின. அமைச்சர் தமது புத்திசாதுரியத்தால் மகாராஷ்டிரத்தின் மானத்தைக் காப்பாற்றுவார் என்று அவர்களுக்கு நம்பிக்கை. சில நாட்கள் அவகாசம் கொடுத்தால் இதற்கு விடை காண்பதாக நானா கூறினார்: மன்னனும் வியாபாரியும் சம்மதித்தார்கள்.

மறு நாள் குதிரைகளைக் கட்டியிருந்த லாயத்துக்குப் போனார் நானா. இரண்டு குதிரைகளையும் கூர்ந்து கவனித்தார். அவைகளின் நிறம், மச்சங்கள், வால் நீளம் ஆகியவை எல்லாமே ஒரே மாதிரியாக இருந்தன. பிரச்னைக்கு விடை காண முடியாமல் கவலையோடு வீட்டுக்குப் போனார் நானா. அன்றிரவு முழுவதும் அவருக்குத் தூக்கம் வரவில்லை. மறு நாள் காலைப் பொழுது விடிந்தது. சோவென்று பெரு மழை கொட்டிக் கொண்டிருந்தது. நானாவின் மனத்தில் திடீர்த் திட்டம் ஒன்று தோன்றியது.

குதிரைகளை அழைத்துக் கொண்டு வருமாறு வியாபாரியிடம் சொன்னார் நானா. அவர்கள் குதிரையோடு ஆற்றங்கரைக்குப் போனார்கள். மழையின் காரணமாக ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

''குதிரைகளை அவிழ்த்து ஆற்றிலே விடுங்கள். அவை அக்கரைக்குப் போகட்டும்'' என்று கட்டளையிட்டார் நானா.

பொங்கிச் சுழித்தோடும் வெள்ளத்தில் குதிரைகள் தள்ளப்பட்டன. கூடியிருந்தவர்கள் எல்லோரும் நானா பைத்தியக்காரத்தனமாக ஏதோ செய்கிறாரே என்று வியப்போடு பார்த்தனர். ஆற்றிலே இரு குதிரைகளும் நீந்த ஆரம்பித்தன. ஆற்றின் நடுவிலே ஒரு பெரிய சுழல் இருந்தது. அதை நெருங்கியவுடன் இரு குதிரைகளும் சிறிது நேரம் தயங்கி நின்றன. திடீரென்று ஒரு குதிரை முன்னேறிச் செல்ல ஆரம்பித்தது. மற்றது அதைப் பின்தொடர்ந்தது. விரைவில் இரு குதிரைகளும் பத்திரமாக அக்கரை சேர்ந்தன.

நானா குதிரை வியாபாரியைப் பார்த்து, ''வியாபாரியே! சுழலிருந்து ஒதுங்கி முதலாவதாகச் சென்றதே அந்தக் குதிரைதான் தாயாக இருக்க வேண்டும். அதிக வயதும் அதனால் ஏற்பட்ட அநுபவத்தோடு, தாயன்பும் சேர்ந்து கொண்டதினால்தான் ஆபத்து வந்தவுடன் தாய்க் குதிரை தன் குட்டியைக் காப்பாற்ற முந்திக் கொண்டு முன்னால் சென்றது'' என்றார்.

சரியான விடையைக் கண்டுபிடித்த நானாவின் புத்தி கூர்மையைக் கண்டு வியாபாரி வியந்தான். தனது இரு குதிரைகளையும் மன்னருக்கு விற்று விட்டுப் புறப்பட்டான். மன்னர் நானாவுக்குப் பல பரிசுகளை அளித்தார்.





சாடர்ன் கிரகம்

(சனி)

கிருஷ்ணவேணி


நவக்கிரக நாயகர்களில் முக்கியமானவராக நாம் கருதுவது யாரை? (சூரியனுக்கு அடுத்தபடியாக) சனீஸ்வர பகவானைத்தானே? சனிக் கிரகத்தை ரோமானியர்கள் **சாடர்ன்** (Saturn) என்று அழைத்தார்கள். கி.மு. ஏழாம் நூற்றாண்டிலேயே இந்தக் கிரகத்தைப் பற்றி மேலை நாட்டினருக்குத் தெரிந்திருந்தது. அஸிரியர் என்பவர்கள் இதை லுபாட்ஸாகுஷ் (Lubadsagush) என்று அழைத்தார்கள். 'மூத்த கிழட்டு ஆடு' என்று இதற்குப் பொருளாம். கிரேக்கர்கள் க்ரோனஸ் என்ற கடவுளின் பெயரால் இக்கிரகத்தை அழைத்தார்கள். விவசாயத்துடன் தொடர்புடைய கடவுள் இவர். கதிர்மணிகளையோ, அறுவடை செய்யும் ஆயுதமான அறிவாளையோ (Sickle) இணைத்து க்ரோனஸின் உருவத்தை உருவகப் படுத்தினார்கள். மேலை நாட்டினர் இக்கிரக நாயகனை வயோதிகராகக் காட்டுவதன் காரணம் இக்கிரகம் மங்கலாகவும் சூரியனை மிக மெதுவாகவும் சுற்றி வருவதனாலும் இருக்கலாம். சூரியப் பாதையில் உள்ள ஆறாவது கிரகம் சாடர்ன்.

இந்தக் கிரகத்தைப் பல வண்ண வளையங்கள் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருப்பது இதன் தனித் தன்மை. டெலஸ்கோப்பின் மூலம் காணும் போது மற்ற கிரகங்களையெல்லாம்விட அழகான தோற்றம் கொண்டது சாடர்ன். வானத்தின் ரத்தினம் என்றும் இதற்கு ஒரு பெயர்.

அளவில் ஜூபிடர் கிரகத்துக்கு அடுத்தபடியானது சாடர்ன். இதன் குறுக்களவு 74,000 மைல்கள். சூரியனிலிருந்து 886 மிலியன் மைல்களுக்கப்பால் இருக்கிறது. சூரியனை ஒரு தடவை சுற்றி வர சனிக் கிரகத்துக்கு 29½ ஆண்டுகள் ஆகின்றன. தன்னைத்தானே தன் இருசில் ஒரு முறை சுழலப் பத்து மணியும் இரண்டு நிமிஷங்களும் ஆகின்றன. அதாவது சனிக் கிரகத்தில் ஒரு நாள் என்பது பத்து மணி நேரம்தான். இதற்கு ஒன்பது சந்திரன்கள்.

சூரியனிலிருந்து வெகுதூரத்திலிருப்பதால் இங்கு மிகக் கடுமையான குளிராக இருக்கும். வெப்ப நிலை மைனஸ் 225 டிகிரி ஃபாரன்ஹீட். இந்தக் கிரகத்தில் தண்ணீர் இருக்குமா? இருக்க முடியாது. பனித் துளிகளால் ஆன வளையங்கள் இக்கிரகத்தைச் சூழ்ந்து சுழன்று வருகின்றன. இதன் மேல் பரப்பு கிட்டத்தட்ட ஜூபிடரைப் போன்றது தான். பசுமை (தாவரங்கள்) கிடையாது. கிரகத்தின் மையப் பகுதி கெட்டியான பாறையால் ஆனதாகவும் அதைச் சூழ்ந்து கனமாகப் பனிக் கட்டி மூடியபடியும் இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள், ஆராய்ச்சியாளர்கள்.

டெலஸ்கோப்பைக் கண்டவரான **கலிலியோ** 1610ம் ஆண்டு ஜூலை மாதம் முதன் முதலில் சாடர்ன் கிரகத்தைக் கண்டதும் இக்கிரகம் மூன்று கிரகங்கள் இணைந்த ஓர் அமைப்பு என்று கூறினார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு சனி கிரகத்தின் அருகே இருந்த இரு உருண்டைகளும் அறவே மறைந்து போனதைக் கண்டு திகைத்துப் போனார். ஆரம்ப தூரதரிசினிகள் இப்போதைப் போலச்



சக்தி வாய்ந்தவை அல்ல. சனி போன்ற மிக தூரத்தில் உள்ள கிரகங்களின் உண்மையான அமைப்பை அப்போது உணர முடியாத நிலையில் இருந்தார்கள் விஞ்ஞானிகள். கிரகத்தின் இரு பக்கங்களிலும் கைப் பிடியைப் போல இணைப்புக்கள் இருப்பதாகக் கண்டார்கள். சனிக் கிரகத்தை ஒரு வகை ஆவிகள் நிறைந்த மண்டலம் சூழ்ந்திருப்பதாகவும், இது சில வேளைகளில் ஒளி ஊடுருவும்படியான மெல்லியதாக இருப்பதாகவும் நம்பினுர்கள்.



சாடர்ன் (சனி) கிரகத்தின் மேல்பரப்பிலிருந்து நோக்கினுல் அதைச் சுற்றிச் சூழ்ந்துள்ள வண்ண வளையம் எப்படித் தெரியும் என்பதை ஒரு கற்பனைக் காட்சியாக இங்கு காட்டுகிருர் ஓவியர். இடது பக்க மூலேயில் சனியின் ஒன்பது சந்திரன்களில் ஒன்று தெரிகிறது. கனமான மேகங்களால் சூழப்பட்ட மேல் பரப்பும் கொடிய இருளும், கடுங்குளிரும் கொண்ட கிரகம் சனி.

டச்சு வான சாஸ்திரியான **கிறிஸ்டியான் ஹைகன்ஸ்** என்பவர் புதிய தூரதரிசினியை உருவாக்கினுர். இது காலிலியோவினுடையதைப் போல் ஐம்பது மடங்கு சக்தி வாய்ந்ததாக இருந்தது. சனியைச் சூழ்ந்துள்ள வளைய அமைப்பு அந்தக் கிரகத்துடன் சேர்ந்திருக்கவில்லை. மிக மெல்லிய பல வளையங்கள் கொண்ட தகடு போன்ற அது சனிக் கிரகத்தைச் சுற்றி வருகிறது என்று நிரூபித்தார். அவர் காலத்திய விமரிசகர்கள் ஹைகன்ஸின் இந்த முடிவை ஆட்சேபித்தார்கள். ஆனுல் வேறு வகை விளக்கம் எதையும் அவர்களால் தருவதற்கு முடியவில்லை. ஆகவே ஹைகன்ஸின் முடிவே சரி என்ருயிற்று. 1655ல் ஹைகன்ஸ் சனிக் கிரகத்தின் முதல் சந்திரனை (சாட்டலேட்) கண்டார். நமது சந்திரனைவிட உருவத்தில் பெரிய இதற்கு டிடான் என்று பெயரிட்டார்.

சனிக் கிரகத்தைப் பற்றிப் பல விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. இத்தாலி நாட்டு வான சாஸ்திரியான **ஜி. டி. காஸினி** என்பவர் சனியினுடைய மற்ற நான்கு சந்திரன்களைக் கண்டு பிடித்தார். **லாபடஸ், ரியா, டியோன், டெதிஸ்** என்பது இவற்றின் பெயர்கள். இந்தச் சந்திரன்களில் லாபடஸில் சில விசித்திரமான — தன்மைகள் தெரிந்தன. இந்தச் சந்திரன் குறிப்பிட்ட இடைவெளிகளில் மறைந்து மறைந்து தோன்றியது. ஆகவே, காஸினி இந்தச் சந்திரனின் பரப்பின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுவிதமாக ஒளியைப் பிரதிபலிக்கும் குணமுடையதாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இவருடைய இந்த முடிவே இன்று வரை ஏற்கப்பட்டிருக்கிறது.

1789ல் **வில்லியம் ஹெர்ஷெல்** என்ற விஞ்ஞானி மேலும் இரண்டு சிறிய சந்திரன்கள் சனிக் கிரகத்தைச் சுற்றி வருவதாகக் கண்டு சொன்னுர். இவற்றுக்கு முறையே **என்ஸெலாடஸ், மிமாஸ்** என்று பெயரிட்டார். 1848ல் இரண்டு வான சாஸ்திரிகள் ஒரே சமயத்தில் சாடர்னின் எட்டாவது சந்திரனைக் கண்டு பிடித்தார்கள். இது **ஹைபீரியன்** எனப் பெயர் பெற்றது. 1898ல் அமெரிக்க வான சாஸ்திரியான **பிக்கரிங்** சனிக் கிரகத்தின் கடைசியும் ஒன்பதாவதுமான சந்திரனைக் கண்டு பிடித்தார். **ஃபோப்** என்று பெயரிடப்பட்ட இது மற்ற சந்திரன்களின் பாதைக்கு நேர் எதிர்ப் பாதையில் சுற்றுகிறது.

சனிக் கிரகத்துக்கு ஒட்டியாணம் அணிவித்ததுபோன்றுள்ள வளையத்தைப் பற்றிய காஸினியின் ஆராய்ச்சி புகழ் பெற்றது. தகடு போன்ற இவ்வளையத்தினிடையே இடைவெளிகளும் இருக்கின்றன என்ற உண்மையைக் கண்டவர் காஸினி, இதற்குக் 'காஸினி டிவிஷன்ஸ்'



என்று பெயர். காஸினியுடன் இவருடைய மகன் **ஜாகுவிஸும்** ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவர்கள் சாடர்னைச் சுற்றியுள்ள இந்த வளையம் எதனால் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்தார்கள். மிக நுண்ணிய பொருள்களோ அல்லது மினி ஸாடலைட்டுகளோ மாறுபட்ட வேகங்களில் சாடர்ன் கிரகத்தைச் சூழ்ந்து சுற்றி வருகின்றன. அந்தக் கூட்டங்களின் தோற்றமே இவ்வளையம் என்ற முடிவை அறிவித்தார்கள்.

சாடர்ன் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையம் ஒழுங்கானது. மற்ற கிரகங்களிலிருந்து தனிப்படுத்திக் காட்டும் தன்மை இந்த வளையத்துக்கு உண்டு. மிகப் பெரிய தூரதரிசினியின் மூலம் நோக்கும்போது இந்த வளையத்தின் அழகு அற்புதமானது. கண் கொள்ளாக் காட்சியாகத் திகழக் கூடியது. மறக்க முடியாத காட்சி அது' என்று பாராட்டுகிறார்கள் வானியல் வல்லுநர்களும் கணிதப் பேராசிரியர்களும். இந்த வளையம் மூன்று பாகங்களாகப் பிரிந்துள்ளது. வெளி வட்டம், நடு வட்டம் (ஒளி மிக்கது) மங்கலான உள் வட்டம். வெளி வளையத்தைவிட உள் வளையம் வேகமாகச் சுற்றுகிறது. வளையத்தில் பல பகுதிகள் ஏற்பட்டிருப்பதற்கு அந்தப் பாதையில் உள்ள சாடலைட்டுகளின் ஈர்ப்புச் சக்திதான் காரணம் என்று கருதுகிறார்கள் விஞ்ஞானிகள்.

சாடர்ன் கிரகத்தைச் சுற்றியுள்ள இந்த வளையங்கள் எதனால் ஏற்பட்டிருக்கும்? பனிக் கட்டித் தூள், பாறை கற்கள் இவைகள் நிறைந்ததுதான் இந்த வளையங்கள். இவை எப்படி இந்தப் பாதையில் வந்தன? சனிக் கிரகத்தின் ஈர்ப்புச் சக்திக்கு ஈடு கொடுக்க முடியாதபடி ஒன்றோ அல்லது பலவோ சந்திரன்கள் ஒன்றோடு ஒன்று மோதி உடைந்து சிதறியதினால் ஏற்பட்டவை இந்தத் துகள்கள் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

சாடர்ன் கிரகத்தில் இறங்கி ஆராய்ச்சி நடத்த முடியுமா? சாத்தியக் கூறுகள் ஏதும் இதுவரை இருப்பதாகத் தெரியவில்லை. ஜுபிடருக்கும் அப்பாலுள்ள இதற்கு மனிதன் போவது முடியாத காரியம். ஜுபிடரை ஆராய எப்படி அதன் சந்திரன்களில் ஒன்றில் இறங்கிச் செயல்படலாம் என்கிறோமோ அதே போல இதனுடைய சந்திரன்களில் பெரியதான டிடானில் இறங்கிச் சனிக் கிரகத்தை ஆராயலாம். காரணம் இந்தச் சந்திரன் ஒன்றில்தான் அதற்கான சாதகமான சூழ்நிலை இருக்கிறது. டிடானின் மேல் பரப்பில்தான் வாயுக்கள் நிறைந்துள்ளன. அது **மேதேன்** என்ற விஷ வாயுவானாலும் ராக்கெட்டுகளை இயங்கச் செய்யும் எரிபொருளாக இவ்வாயுவை மாற்ற முடியும். ஆகவே டிடானில் இறங்கினால் மறுபடி கிளம்புவதற்கு வாய்ப்புண்டு. ஆனால் இது முடியக் கூடிய காரியமா?

மஞ்சள் நிறமுடைய சனிக் கிரகத்தின் ஆராய்ச்சிகள் தொடருகின்றன. அம்மோனியா, மெதேன் போன்ற வாயுக்கள் உறைந்த நிலையிலுள்ள இக்கிரகத்துக்கு மனிதன் போகக் கூடிய வாய்ப்புக்கள் உண்டா என்பதை வருங்கால ஆராய்ச்சிகள் மூலம்தான் அறிய வேண்டும்.

வாடா மலர்



நோய் இல்லை என்று
மனத்தில் உறுதி செய்.
மனம்போல் உடல்! — **பாரதியார்.**

★

உண்மையை மிதித்தால் அது உடனே
வாளாக மாறி விடும். — **ஹென்றி ஜார்ஜ்**


SISTA'S-INC-462 TM
வளரும் குழந்தைகளுக்கு வாய்ப்பான துணை இன்க்ரிமின்!
வளரும் பருவம்!
10 ml
Incremin*
drops LYSINE-VITAMINS
TONIC APPETITE STIMULANT
சிரித்து விளையாடும் பருவம் பொங்கிப் பெருகும் பூரிப்பான ஆரோக்கியம்! உடலும் உள்ளமும் ஓங்கி வளரும் இச் சமயத்தில் உங்கள் குழந்தைக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் வழங்கி வாருங்கள். பலனளிக்கும் வைட்டமின்கள், மற்றும் அதிமுக்கிய அமினோ அமிலம் இரண்டு அடங்கியது. இன்க்ரிமின் டிராப்ஸ் 2 மாதம் முதல் 2 வயது வரையிலான குழந்தைகளுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது.
இன்க்ரிமின் டானிக்
வளரும் பருவத்தினருக்கு ஒரு வரப்பிரசாதம்
Lederle
* அமெரிக்கன் ஸயனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

சிலந்தி வலை

சிலந்தி தன் பட்டு நூலை வலை பின்னுவதற்காக மட்டுமே உற்பத்தி செய்கிறது என்றுதான் நினைப்பீர்கள். வீடாக, வாழுவதற்கான வழியாக, கக்கூன்களாக, நீரில் மூழ்கப் பயன்படும் சாதனமாக, உணவைச் சுருக்கிட்டு இழுக்கும் கயிறாக, ஸ்பிரிங் பொறியாக இப்படி எத்தனையோ விதங்களில் சிலந்திதான் பின்னும் பட்டு நூலைப் பயன்படுத்துகிறது என்றால் உங்களுக்கு வியப்பாயில்லையா?

சிலந்தி பூச்சி இனத்தைச் சேர்ந்ததில்லை. அராக்னிட் (*Arachnid*) என்ற வகையைச் சேர்ந்தது. சிலந்திக்கு எட்டுக் கால்கள் உண்டு. ஆனால் இது எட்டுக்கால் பூச்சியல்ல. இதற்கு எட்டுக் கண்கள் உண்டு; இறக்கை கிடையாது.

எல்லா விதமான சீதோஷ்ண நிலைகளிலும் சிலந்தியினால் வாழ முடியும். சிலந்தி வயிற்றின் முனையில் பல நுண்ணிய துவாரங்களோடுகூடிய நூற்கும் சாதனம் இருக்கிறது. இந்த நுண்ணிய துவாரங்களின் வழியே உடலிலிருந்து வெளிப்படும் ஒருவகைத் திரவத்தை வேகத்துடன் அழுத்தி வெளிப்படுத்துகிறது. இத்திரவப் பொருளின்மீது காற்றுப் பட்டதும் கெட்டியாகிறது. இதுவே சிலந்தி நூல். பசைத் தன்மையோடுகூடிய பட்டு நூலினால் வலை பின்னுகிறது. ஏனென்றால் இதன் உணவான சிறு பூச்சிகள் இப்பட்டு நூலில் விழுந்தால் ஒட்டிக்கொள்ளும். சிலந்தி வலையின் 'ஸ்போக்ஸ்' எனப்படும் குறுக்கு நூல்கள் கெட்டியான பட்டு இழைகளால் ஆக்கப்பட்டிருக்கும். இதற்குப் பசைத் தன்மை கிடையாது. கூட்டுப் புழுவுக்காக நெய்யப்படும் பட்டு நூல் வேறு வகையானது. வலை பின்னுவதற்கும் சிலந்திகள் பல்வேறு தரமுள்ள நூல்களை உற்பத்தி செய்கிறது. வட்ட வடிவமான சிலந்தி வலைகளைத்தான் நீங்கள் அதிகமாகக் காண்பீர்கள். தகடு போன்றும் சிலந்தி வலை பின்னும். இத்தகைய வலைகளைக் கூடை போலவும் கோபுரமாகவும் அமைக்கும் ஆற்றல் கொண்டவை சிலந்திகள். பூமிக்குள் குழி தோண்டி உட்புறத்தில் கூடை போன்ற பொறி அமைத்து அதற்கு மூடியும் போட்டு உணவுக்காக வந்துவிழும் பூச்சிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும். சில வகைச் சிலந்திகள் மணியைப் போல் கூடுபின்னி நீருக்குள் மூழ்கி வாழும். இந்த வகை நூல்களில் நீர் ஒட்டுவதுமில்லை, உள்ளே தண்ணீர் போவதுமில்லை.



சாய்ந்த கோபுரம்

'பைசா நகரத்துச் சாய்ந்த கோ
ரம்' என்று படித்திருப்பீர்களோ? இ
ஒரு மணிக்கூண்டு. வடக்கு இத்தா
யில் உள்ள டுஸ்கான் நகரில் உள்ள க
கதீட்ரலின் அருகே இந்தக் கோபு
இருக்கிறது. செங்குத்து நிலையிலிருந்
பதினாறு அடிகள் சாய்ந்தபடி இ
கும் இது உலக அதிசயங்களுள் ஒன்
1174ல் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்ப
டது. இதன் கட்டடக் கலைஞர்களா
பொனானோவும் இன்ஸ்புருக் கை
சேர்ந்த வில்லியமும் இதைச் சாய்
நிலையில் கட்ட வேண்டும் என்று திட்
மிடவில்லை. ஆனால் கட்டி முடி

பிளாக் மார்க்!

மோட்டார் வண்டிகளை ஓட்டு
போது செய்யப்படும் குற்றங்களை
தடுக்க 'பாயின்ட்ஸ்' முறை உ
யோகிக்கப்படுகிறது. இதற்காகவே ஓ
காரியாலயம் உள்ளது. மோட்டா
வண்டிகளின் எண்ணிக்கை, அவைகளை
ஓட்ட லைசென்ஸ் வழங்கப்பட்டவர்க
பெயர், விவரங்கள் எல்லாம் இங்
சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன
மோட்டார் ஓட்டும் போது செய்ய
படும் குற்றங்கள் எல்லாம் இங்கு பதிவ
கின்றன.

ஒரு மோட்டார் ஓட்டுபவர் ஓ
குற்றம் செய்தால் அந்தக் குற்ற
பற்றிய தகவலின் பிரதி இந்தக் காரிய
லயத்துக்கு அனுப்பப்படும். அத்தகவ
அந்த மோட்டார் ஓட்டுபவரி
லைசென்ஸ் தகவலோடு இணைக்கப்ப
டிருக்கும். ஒவ்வொரு குற்றத்துக்கு


சூரிய ஸ்நானம்

சூரிய ஒளி தோலுக்கு எவ்வளவு
நன்மைகளைச் செய்கிறது என்ற விஷய
நம்மில் சிலருக்கே தெரியும். சூரி
ஒளியில் அதிக நேரம் இருந்தால் உட
கறுத்துப் போகும். சூரிய ஒளியிலுள்ள
அல்ட்ரா வயலட் கிரணங்களினால் ஏ
படும் மாற்றம் இது. தோலில் ஹிஸ்
டின் (*Histidin*) என்ற பொருள் இரு
கிறது. இதில் இக்கிரணங்கள் பாய்வதே
தோல் நிறத்தில் மாறுதல்களுக்கு
காரணமாகும். டைரோசின் (*Tyrosin*
என்று இன்னொரு பொருள் தோலி
உள்ளது. இதில் அல்ட்ரா வயல
கிரணம் பாயும்போது தோலைப் பழுப்
நிறமான வண்ணமாக மாற்றுகிறது
இதற்கு மெலானின் (*Melanin*) என்

இது சாய்ந்த நிலையில் காட்சி அளித்தது! 183 அடி
முடைய இது சலவைக் கற்களால் ஆக்கப்பட்டது. அடித்
துச் சுவரின் கனம் 13 அடிகள். இதன் கனம் வர வரக்
ந்து உச்சியில் உள்ள கோபுரத்துச் சுவரின் கனம் ஆறு
ாக உள்ளது. அடித்தளத்தில் அரை வட்ட வளைவுகளோடு
பதினைந்து தூண்களின் மீது இக்கட்டடம் எழுப்பப்பட்டுள்
ஆறு மாடிகளையும் உச்சியில் மணிக்கூண்டு மண்டபமும்
ண்டது இது. மாடிகள் ஒவ்வொன்றிலும் முப்பது தூண்கள்.
பைசா நகரின் பிரபல கணித, பௌதிக, வானியல் வல்லுன
கலிலியோ காலிலி தமது விஞ்ஞானத் தத்துவங்களை இந்தக்
ரத்தின் மீது ஏறி நின்று கொண்டுதான் நிரூபித்தார்.
வெள்ளத்தால் இதன் சாய்மானம் வர வர அதிகமாகி வரு
கவும் ஒரு நிலையில் இந்தப் புகழ்பெற்ற கோபுரம் கீழே
ந்துவிடும் என்றும் கணக்கிட்டு அதைத் தடுத்து நிறுத்தி
ரக் காப்பாற்றிப் பாதுகாப்பதற்கான வழி முறைகளை
துச் செயல்பட்டு வருகிறார்கள், கட்டடக் கலைவல்லுநர்கள்.




்க் மார்க்' உண்டு. 'நோ பார்க்கிங் வட்டாரத்தில் வண்டிகளை
்திருல் அபராதம் விதிக்கப்படுவதுடன் ஒரு 'பிளாக் மார்க்'
ஏறிவிடும். நெடுஞ்சாலைப் பெருவழியில் 'பார்க்' செய்தால்
ரு இரண்டு பிளாக் மார்க்குகள். வேகக் கட்டுப்பாட்டை
காரை ஓட்டினால் மூன்று பிளாக் மார்க்குகள். குடித்து
ு ஓட்டினால் நான்கு பிளாக் மார்க்குகள். லைசென்ஸ் இல்லா
ஓட்டினால் ஆறு பிளாக் மார்க்குகள். ஒருவர் மீது காரை
ி விட்டுத் தப்பி ஓடிவிட்டால் ஏழு பிளாக் மார்க்குகள்.
மோட்டார் ஓட்டுபவர் கணக்கில் ஒன்பது பிளாக் மார்க்
சேர்ந்துவிட்டால் அவருக்கு எச்சரிக்கை நோட்டீஸ் வந்து
பதினாறு பிளாக் மார்க்குகள் சேர்ந்துவிட்டால் அவர்
டும் 'டிரைவிங் டெஸ்டு'க்கு உட்பட வேண்டும். பதினெட்டு
ாக் மார்க்குகள் கிடைத்துவிட்டால் மோட்டார் ஓட்டும்
சன்ஸ் கோவிந்தாதான் !



ஒரு டிரைவருக்கு இந்த பதினெட்டு பிளாக் மார்க்குகள்
ண்டு ஆண்டு காலத்துக்குள் சேர்ந்துவிட்டால் அவர் ஒரு மனோ
ுவ நிபுணரைக் கலந்து மேற்கொண்டு மோட்டார் வண்டியை
டலாம் என்பதற்கு அவரிடம் சர்டிபிகேட் வாங்க வேண்டும்.
ந்தைய நடவடிக்கைகளால் அடிக்கடி குற்றம் செய்பவர்கள்
ாட்டார் ஓட்ட இயலாமல் செய்யப்படுகிறது. இதெல்லாம்
ஊரில் இல்லை. ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில்தான்!

ார். இந்த மெலானின் தோலின் மேல்பாகத்தில் சேர்ந்து
்ரா வயலட் கிரணங்களின் கிரியை ஓர் அளவுக்கு மேல்
ல்பட முடியாதபடி ஒரு காப்பானாக விளங்குகிறது.
உடல் ஆரோக்கியத்துக்கும் சூரிய வெளிச்சம் உதவியாக
கிறது. தோலைத் தொற்றும் காளான், பாக்டீரியா போன்ற
மிகளைக் கொல்லும் வல்லமை சூரிய ஒளிக்கு உண்டு. ரத்தக்
ய்களோடு தொடர்பு கொள்ளும் ஒரு வகைப் பொருளைச்
ஒளி தோலில் உண்டாக்குகிறது. இது ரத்த அழுத்தத்தை
றைக்கச் செய்கிறது. உடலுக்கு வைட்டமின் D கிடைக்கிறது.
த்தி நோய்க் கிருமிகளோடு போராடக்கூடிய (செல்) ஜீவ
ுக்களுக்குச் சூரிய ஒளி அதிக சக்தியைத் தருகிறது. உடலின்
தூர்கள் சூரிய ஒளியினால் பதப்படுத்தப் படுகின்றன. நரம்பு
மண்டலங்களைச் சுறுசுறுப்புள்ளதாக்குகிறது. இத்தனை சிறப்புக்
ண்ட சூரிய ஒளி அருமருந்தாயிற்றே! ஆகவே அதை மருந்
்போலவேதான் ஏற்க வேண்டும். சூரிய ஸ்நானம் செய்தால்
ம்தானே என்று கொளுத்தும் வெயிலில் நாளெல்லாம்
க்கூடாது. அதிகமான சூரிய ஒளி உடலுக்கும் தோலுக்கும்
ு விளைவிக்கவும் செய்யும்.





நடக்கும் வீடு!

கவிஞர் தமிழ்முடி

நத்தை ஒன்று தன்வீட்டை
நன்றாய் முதுகில் சுமந்தபடி,
மெத்த வருந்திச் செல்வதனை
மிகவும் நெருங்கிப் பார்த்திட்டேன்.

பார்த்துப் பேச .விருப்பமாகிப்
பார்த்தேன், நெருங்கி அதனாலே,
வேர்த்துப் பயந்து கோபமுடன்
வீட்டுள் சென்றே ஒளிந்ததுவே !

ஏனோ என்றே அறியாமல்
இரக்கம் கொண்டவ் வீட்டின்முன்
நானே சென்று, ''நண்பாவா
நானுன் தோழன் பயம்வேண்டாம் !''

என்றே சொன்னேன்! எனைப் பார்த்து
''என்னை நீயும் வஞ்சனையால்
கொன்று போட்டே என்வீட்டைக்
கொண்டு செல்லப் பார்க்கின்றாய் ''

என்றே சொன்னது! அதனாலே
இதயம் கனிந்து பதில் சொன்னேன்.
''கொன்று போடும் வஞ்சனையால்
கூப்பிட வில்லை வா!''என்றேன்.

வெளியில் கொஞ்சம் தலைநீட்டி
'விவரம் என்ன என்றதுவே !'
'பளிங்கு வீட்டைப் பெற்றிருந்தும்,
பட்டினம் தன்னில் வாழாமல்,

காட்டில் மலையில் சுற்றுவதேன் ?
கட்டிய வீட்டைப் பிரியாமல்
மூட்டை போலச் சுமந்தபடி,
மூச்சுத் திணற நடப்பதும்ஏன்?''

நத்தை :
பட்டினம் தன்னில் என்வீட்டைப்
பாங்காய் வைத்தால் வரிகேட்பார்
அட்டி சொன்னால் விடமாட்டார்
அதிகா ரத்தால் பிடுங்கிடுவார்



நான் :

மண்மேல் கட்டும் வீட்டிற்கே
மனிதர் வரிகள் போட்டிடுவார்....

நத்தை :

எண்ணி அதனால் என்வீட்டை
என்மேல் கட்டிச் சுமக்கின்றேன்!

நான் :

ஆத லாலே பட்டினம்வா!
யாதும் வரிகள் போடார்கள்,
ஏதும் சிரமம் இல்லாமல்
இன்ப மாக வாழ்ந்திடலாம் !

நத்தை :

வாழ்வோர் அதிகம் பெருகுவதால்
வாடகை வீடு வேண்டுமென
சூழ்ந்து வந்தே என்னிடத்தில்
தொந்தரவதிகம் செய்திடுவர்

நான் :

ஒருவர் மட்டும் வாழ்வதற்கே
உகந்த தாகும் உன்வீட்டை ...
கருதி யாரும் வரமாட்டார்
கவலை இன்றி வாழ்ந்திடலாம் !

நத்தை :

அதிசயமான பொருள் எதுவும்
அரசாங்கத்தார் பார்த்திட்டால்
புதுமைப் பொருளைச் சேர்த்து வைக்கும்
பொருட்காட்சி, உயிர்ச்சாலையிலே

கொண்டு வைத்து மகிழ்வார்கள் !
கொஞ்சமும் பிறர்துயர் எண்ணார்கள்.
கண்டால் என்னை விடுவாரோ ?
காட்சி சாலையில் போட்டிடுவார்.

ஆத லாலே பட்டினத்தில்
அடியேன் இருக்க வரமாட்டேன்
ஏதும் இனிமேல் கேட்காதீர் !
என்னைத் தடுத்தும் நிறுத்தாதீர் !



நத்தையாரே, நத்தையாரே !

"கேயெம்கே"

நத்தையாரே! நத்தையாரே!
நகர்ந்துவாரும் நத்தையாரே!
அத்தையுன்னை அழைக்கின்றான்,
அசைந்து வாரும் நத்தையாரே !

ஆடையற்ற நத்தையாரே !
ஆமைவேக நத்தையாரே !
ஓடைப் பக்கம் உருண்டு வந்து
ஒளிந்து வாழும் நத்தையாரே !

முத்தைப் பெற்ற நத்தையாரே !
மூடிப்பெற்ற நத்தையாரே !
மெத்தைப் போன்ற நத்தையாரே !
மீசையுள்ள நத்தையாரே !

முத்து வாங்க கொக்கு அத்தை
முறுவலித்து நிக்குதுங்க !
புத்தியுள்ள நத்தையாரே,
புரிந்து ஒதுங்கி நடவுங்க !



மாணிக்கம்

க. முத்துசாமி

“தம்பி, மாணிக்கம்... ஏம்ப்பா, இன்னிக்கு லேட்?''

''மார்க்கெட்டுக்குப் போயிருந்தேன், சார். கொஞ்சம் லேட்டாயிடுச்சு.''

''மார்க்கெட்டுக்குப் போக வேண்டிய வேலையிருக்குதில்லே? அந்த வேலை—விஷயமெல்லாம் கவனிச்சுட்டு நாளைக்கு வர்றது. 'லேட்'டா வர்ற விஷயம் எனக்குச் சுத்தமாப் பிடிக்காதுங்கிறது உனக்குத் தெரியுமில்லே?''

கடமையைப் பெரிதாக நினைக்கும் உள்ளத்திலிருந்து எழுந்தன சொற்கள். மாணிக்கம் பதறினான்.

''சார்.... இன்னிக்கு மட்டும்தான் இப்படி ஆயிடுச்சு. இனிமே இப்படி ஆகாது.....''

மாணிக்கத்தை அவர் உள்ளே விடவில்லை. வகுப்பு வாயிலில் நின்று கொண்டிருந்தான், அடக்க ஒடுக்கமாக.

''இன்னிக்கு உனக்கு வார்னிங்.... இனி இப்படி 'லேட்'டா வந்தா நான் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டி வரும்.''

தம் மகனே லேட்டாக வந்திருந்தாலும் தம் பையிலிருந்து அபராதத் தொகையைக் கொடுக்கிற கறார்ச் சுபாவம்தான் அவருடையது. ஆனால் அவருக்குக் குழந்தையே இல்லை.

''சரி, போய் உட்கார்!'' என்றார்.

மாணிக்கம் உள்ளக் கிலேசத்தோடு போய் இடத்தில் அமர்ந்து கொண்டான். எல்லோருக்குமே அவன் மீது சற்றுப் பரிவு.

''உனக்கு அபராதம் எதுவும் விதிக்கப் போவதில்லை. ஆனால் இன்று காலை மூன்று வகுப்புக்களுக்கும் உனக்கு 'ஆப்செண்ட்' போட்டுவிட முடிவு செய்து விட்டேன்'' என்றார் அவர்.

மாணிக்கம் எதைச் சொல்வான்? அவனுக்கு எதுவும் விளங்கவில்லை.

வாய் திறக்காமல் உட்கார்ந்திருந்தான் மாணிக்கம்.

“மாணிக்கம்னு ஒரு பையன். என்னமோ இன்னிக்கு லேட்டா வந்தான். எனக்கும் 'மூட்' சரியில்லே.... மூணு வகுப்புக்கும் அவனுக்கு 'ஆப்செண்ட்' போட்டுட்டேன்....,''

'' ஏங்க அப்படிச் செய்தீங்க.... அநியாயம் இது.... அடுக்காது!...''

ஆசிரியரின் மனைவி அங்கலாய்த்தாள்.

''எப்பவும் கரெக்ட்டா வர்றவன் ஏன் இன்னிக்கு லேட்டா வர்றான்.....? நல்லவனா இருக்கிறவன் என்னைக்கும் நல்லவனா இருக்கணும்கிற ஆசையிலேதான் மீனாட்சி, நான் அவனுக்கு 'ஆப்செண்ட்' போட்டேன். இது நியாயம்தானே!''

'' எதுங்க நியாயம்? நீங்க சரியா இன்னிக்கு இல்லாத காரணத்தாலே அவன் லேட்டா வந்தான்.....''

''என்ன மீனாட்சி சொல்றே நீ?''

பதற்றமும் குற்ற உணர்வும் அந்தக் கேள்வியில் இருந்தன.

''ஒல்லியா ஒரு பையன் சிவப்பு டிராயர் போட்டிருந்தானே அவன் தானே மாணிக்கம் ?''

''அவனேதான். ஏன் ?''

''அவன் என்னைக்கும் நல்லவன்தான். உங்க வருத்தத்திலே அர்த்தமேயில்லே. பள்ளிக்கூடம் ஆரம்பிக்கக் கொஞ்ச நேரம்தான் இருந்திருக்கும். வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். நம்ம வீட்டு வழியாகத்தானே அவன் உங்க ஸ்கூலுக்கு வந்தாகணும் ?''

''நீங்க நம்ம வீட்டுக்கு வந்தவங்களை யெல்லாம் வழியனுப்பிவிட்டு வர்து உடனே ஸ்கூலுக்கு லேட்டாகி விடும் என்று போயிட்டீங்க. மார்க்கெட்டுக்குப் போக மறந்து போச்சு உங்களுக்கு.''

விஷயம் விளங்கிவிட்டது அவருக்கு. மீனாட்சி தொடர்ந்தாள்.

''இன்னிக்குச் சாயங்காலம் என் தம்பி வேறே வர்றதா எழுதியிருந்தானா ? அதனாலே நான்தான் அந்தப் பையனை 'மார்க்கெட் வரைக்கும் போய் விட்டு வாப்பா' என்று அனுப்பினேன். என்ன சுருக்கா வந்திட்டான். நீங்கள் ஒரு மணியில் போய் வாங்கி வருவதை அவன் அரை மணியில் வாங்கி வந்தான். 'ஏன் லேட்'டுன்னு கேட்டா காரணத்தை உங்ககிட்டச் சொல்லச் சொன்னேனே.... அவன் சொல்லவில்லையா ? ஆரம்பப் பீரியடு ஒங்களோடதுதானேங்கறதனாலேதான் நான் கொஞ்சம் துணிச்சலா அனுப்பினேன். பள்ளிக்கூடத்துப் பையனை வாத்தியார் வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லக் கூடாதுதான். ஆனால் ஆபத்துக்குத் தோஷமில்லேன்னு நெனச்சு அப்படி நடந்துக்கிட்டேன்.''

''அவன் இதைச் சொல்லவே இல்லையே......!''

அவர் நெஞ்சை என்னவோ செய்தது. தவறு தம் மீதுதானா ? அவன் லேட்டாக வந்ததற்கு நான்தான் காரணமா?

''ஏம்பா தம்பி மாணிக்கம். இதை ஏன் நீ எங்கிட்டே சொல்லலே? என் வீட்டுக்காரிதான் மார்க்கெட்டுக்குப் போகச் சொன்னாங்கறதை நீ சொல்லியிருக்கலாமே....!'' அடுத்த தடவை மாணிக்கத்தை அவர் சந்தித்ததும் கேட்ட வினா இதுதான்.

மாணிக்கம் அதற்கும் மௌனம் சாதித்தான்.

''ஏம்பா, மாணிக்கம்... மௌனமாயிருக்கிறே...? இங்கே வேறே யாரும் இல்லே. காரணத்தைச் சொல்லு...''

அவருடைய வார்த்தைகளில் அன்பு இழைந்தது அவரை அறியாமலேயே....

''அது சார்.... நீங்க, 'ஏன் லேட்டா வர்றே'ன்னு வகுப்பிலே பல பேருக்கு முன்னாடி திட்டினப்போ. நான் மட்டும் மனசாலே கஷ்டப்பட்டேன்..... உண்மையை நானும் வகுப்பிலே சொல்றேன்னு வைச்சுக்குங்க....நான் லேட்டா வந்ததுக்கு நீங்களும் ஒங்க வீட்டுக்காரம்மாவும்தான் காரணம்னு நீங்க அறியறப்போ மத்தவங்க உங்களைப் பத்தித் தப்பா நெனைச்சுப்பாங்களே !''

'' 'நீ ஒருத்தன் கஷ்டப்பட்டாலும் மத்தவங்க மனசு கஷ்டப்படாதபடி பார்த்து நடந்துக்கடா மாணிக்கம். உன்னாலே மத்தவங்க மனசு கஷ்டப்படாமே இருக்கச் செய்ய முடியும்னா அதற்கான உண்மை வழியான பொய்யையும் சொல்லுடா மாணிக்கம்'னு எங்கப்பா சொல்லியிருக்கார் சார். அவருங்கூட ஓர் ஆசிரியர்தான். ஆனா இங்கே இப்போ இல்லே... அவர் இறந்து போயிட்டார் சார்.''

மணி மணியாய் வேதாந்தி போல் வார்த்தைகளை உதிர்த்துவிட்டு அவனுக்கே உரிய எளிமையோடு நின்று கொண்டிருந்தான் மாணிக்கம்.

''மாணிக்கம் நீ பெயரில் மட்டும் இல்லை குணத்திலும் மாணிக்கம்தான்'' என்றார் ஆசிரியர்.




ஆஞ்சநேயன்
13
கதை: ரா.கணபதி
தாம் வாக்களித்தபடி ராமபிரான் வாலியை வதம் செய்து சுக்ரீவனைக் கிஷ்கிந்தையின் மன்னராக்கினர். அவனும் தன் வாக்குப்படி வானர சேனையைச் சீதாதேவியைத்தேட நாலா திசைகளுக்கும் அனுப்பினான்.
ஆஞ்சநேயா! பலம், புத்தி, சமயோசிதம் அடக்கம் இவையெல்லாம் கொண்ட உன்னையே இக்காரியத்தின் வெற்றிக்கு நம்பி இருக்கிறேன் நீ தென் திசைக்குப் போ
வானரோத்தமா! உனக்கு வெற்றி கிடைக்கட்டும். நீ சீதையைக் கண்டதும் இந்த மோதிரத்தை அவளிடம் கொடு. என்னுடைய தூதன் என்பதை அவள் உணருவாள்.
ராமபிரானின் பூரண ஆசியைப் பெற்றுத் தன் கூட்டத்துடன் கிளம்பினார் மாருதி. அவருடன் ஜாம்பவானும், வாலியின் மகன் அங்கதனும் போனார்கள்.
பல நாள் தேடி அலைந்து இளைத்துப் போன அவர்கள் ஒரு நாள்......
இதோ ஒரு பிலத்துவாரம். இதிலிருந்து பறவைகள் வருகின்றன. அவற்றின் உடல் நனைந்துள்ளது. வாயிலும் பழங்கள் உள்ளன. வாருங்கள் இதனுள் போய்ப் பார்க்கலாம்.
இருள் மண்டிய பிலத்துவாரத்தினுள் அனுமன் முன் செல்ல மற்றவர் பின் தொடர்ந்தனர்.
ஆஞ்சநேயா! எங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லையே...
எந்த தூரம் இப்படியே இருளில் போய்க் கொண்டிருப்பது!



தன் தோழர்களுக்குத் தைரியமூட்டியபடி அழைத்துச் சென்ற ஹனுமார், முடிவில்...
ஆஹா! என்ன அற்புதமான காட்சி!
வகை வகையான பழங்கள் வாழ் நாளுக் கெல்லாம் போதும் போலிருக்கிறதே!
அந்த ரமணீயமான இடத்திலே ஒரு கோடியில்....
தாயே தாங்கள் யார் என்பதை நான் அறியலாமா?
அனுமனின் அடக்கத்தையும் வணக்கத்தையும் கண்ட அப்பெண் மகிழ்ச்சி அடைந்தாள்.
நீங்கள் எல்லாரும் களைத்திருக்கிறீர்கள். இங்குள்ள சுவை மிக்க கனிகளை உண்டு பசியாறுங்கள் முதலில்...
அனுமதி கிடைத்த பிறகும் சும்மா இருப்பார்களா? வானரங்கள் வயிறார உண்டு களித்தனர்.
அனுமனுக்குத் தன் கதையைக் கூறுகிறாள் அப்பெண்.
தேவலோக நாட்டிய நங்கையான ஹேமையின் தோழி நான். என் பெயர் ஸ்வயம்பிரபை....
தேவ சிற்பியான மயன் ஹேமையிடம் மையல் கொண்டு, அவளைப் பூவுலகம் அழைத்து வந்து, அவளுக்காகப் பூமிக்கடியில் இந்த அற்புதமான உலகத்தை நிர்மாணித்தான். ஹேமையுடன் நானும் இங்கு வந்தேன்.
தொடரும்

நந்தகுமார் வீட்டில் கொலு வைத்திருந்தார்கள். வண்ணப் பொம்மைகள் அவன் கண்ணைக் கவர்ந்தன. கொலு வைத்திருந்த கூடத்தையே அவன் சுற்றிச் சுற்றி வந்தான். அவனுக்குச் சாப்பிடப் போகக்கூட மனம் இல்லை.

கொலுவுக்குத் தினம் தினம் பூஜை, நைவேத்தியங்கள் செய்வார்கள். நாளுக்கொரு தினுசாகச் சுண்டல் கிடைக்கும். விசேஷ தினங்களில் பட்சணங்களும் கிடைக்கும். மாலை வேளைகளில் வீட்டில் உள்ள சிறுமிகள் தினம் ஒரு வேஷம் போட்டுக் கொண்டு எல்லோரையும் அழைக்கப் போவார்கள். நவராத்திரி ஒன்பது நாட்களுக்கும் நந்தகுமாரின் தங்கை ராமன், கிருஷ்ணன், ராதை, ஆண்டாள், மோகினி என்பது போலப் பலவிதமான வேஷங்களைப் போட்டுக் கொள்வாள்.

நவராத்திரி வந்தால் தன் தங்கைக்கு மட்டும் புதுப் புது வேஷங்களும், அலங்காரங்களும் கிடைக்கிறதே என்று நந்தகுமாருக்குப் பொறாமையாக இருக்கும். தானும் ஒரு பெண்ணாய்ப் பிறந்திருக்கக் கூடாதா என்றுகூடத் தோன்றும். நவராத்திரியில் ஆண்களைக் கவனிப்பார் இல்லையே என்று அவனுக்குக் கவலை தான்.

தன்னை எல்லோரும் கவனிக்கும்படி ஏதாவது செய்தால் தேவலை என்று நந்தகுமார் எண்ணினான். கொலுவில் இருந்த காந்தி பொம்மையைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

தன் தகப்பனாரிடம் தனக்கு ஒரு சர்க்கா வாங்கித் தரும்படி தொந்தரவு செய்தான். ''இப்போது எதற்கடா சர்க்காவும், புர்க்காவும்? அதுக்கெல்லாம் காந்தி இருந்த காலத்தில் மதிப்பு இருந்தது. இப்போ சர்க்கா சுற்றினால் கேலி செய்வார்கள்'' என்றார் அப்பா.

நந்தகுமார் விடவில்லை. அவன் காந்தியின் சரித்திரத்தை வாசித்திருந்தான். அவன் சர்க்காவுக்காகக் காந்திஜியைப் போல் ஒரு நாள் உண்ணாவிரதம் கூட இருக்கத் துணிந்தான்.

தகப்பனார் வேறு வழியில்லாமல் அவனுக்குச் சர்க்கா வாங்கிக் கொடுத்து விட்டார். அத்துடன் ஒரு காந்திக் குல்லாய், நேரு ஷெர்வானி இவைகளையும் வாங்கிக் கொண்டான்.

கொலு வைத்திருந்த இடத்தில் தானும் ஓர் இடம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான், நூல் நூற்க. நேருவைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு சதா நூல் நூற்றுக்கொண்டே இருந்தான். காந்தியின் உண்மையான வாரிசு தானேதான் என்ற நினைப்பு அவனுக்கு. அரட்டை அடிப்பதையெல்லாம் மறந்து அடக்க ஒடுக்கமாகக் காந்தி பொம்மையைப் பார்த்துக் கொண்டே நூல் நூற்றான்.

ஒரு பொம்மையைப்போல் சாதுவாக அடங்கி ஒடுங்கி நந்தகுமார் நூல் நூற்பது எல்லோருக்கும் வியப்பாக இருந்தது.

கொலுவுக்காக வந்த அக்கம்பக்கத்தார் எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள். நந்தகுமார் மேலும் மேலும் ஊக்கமாக நூல் நூற்றான். நன்றாக நூல் நூற்க வந்துவிட்டது. காந்தி பொம்மையைப் பார்த்துக் கொண்டே



இரண்டு மூன்று நாட்களுக்குள் நாலு சிட்டம் நூல் நூற்றுவிட்டான்.

நவராத்திரியின் நடுவில் ஒரு நாள் காந்தி ஜயந்தி வந்தது. அவன் பள்ளிக் கூடத்தில் காந்தி ஜயந்திக்காக ஒரு விழா கொண்டாடினார்கள். விழாவுக்கு ஒரு பெரிய தலைவர் வந்திருந்தார். அவர் காந்தியடிகளைப் பார்த்தவர். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர். மகாத்மாவைப் பற்றியும், கதரின் பெருமையைப் பற்றியும், நூல் நூற்பதின் அவசியத்தையும் அவர் நன்கு மனத்தில் படும்படி எடுத்துரைத்தார். ''நாம் வீண் பொழுது போக்கிய நேரங்களில் சர்க்காவில் நூல் நூற்காமல் போனோமே; காந்தி சொல்லைக் காற்றில் விட்டோமே?'' என்ற வருத்தம் ஏற்பட்டது எல்லாருக்கும். அவருடைய பேச்சு அவ்வளவு உருக்கமாக இருந்தது. ''காந்தியினுடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமானால் அதற்கு நூல் நூற்பது ஒன்றுதான் சரியான செயல்; காந்தி ஜயந்தி சர்க்கா ஜயந்தியாகும்'' என்று தலைவர் கூறினார்.

நந்தகுமாருக்கு என்றும் இல்லாத ஆனந்தம் அன்று. உடனே யாருக்கும் தெரியாமல் தன் வீட்டுக்கு ஓடித் தான் நூற்ற நான்கு சிட்டம் நூலையும் விழா முடிவதற்குள் கொண்டு வந்து தலைவரிடம் கொடுத்துக் காந்தி நினைவு நிதிக்குத் தன் நன்கொடையாக அதை வைத்துக் கொள்ளும்படி அவரைப் பணிவுடன் வேண்டிக் கொண்டான்.

தலைவர் நந்தகுமாரை அன்போடு அணைத்துக் கொண்டு, அவன் பெயர், விலாசங்களை விசாரித்தார். உடனே அவனைப் பற்றி எல்லோருக்கும் அறிவித்து, ''இம்மாதிரிப் பையன்களால்தான் நாளை நாடு முன்னேற வேண்டும். இவனையும் இவன் படிக்கும் பள்ளியையும், இவன் பெற்றோரையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டார். ஒரு புத்தகத்தில் தம் கையெழுத்திட்டு அவனுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.



அன்று முதல் நந்தகுமாரின் மதிப்பும் உயர்ந்துவிட்டது. அனைவரும் தலைவர் அவனைப் பாராட்டியது பற்றியே பேசினர். தனக்குக் கிடைத்த கௌரவத்துக்குக் காந்தியடிகளே காரணம் என்று கருதி நந்தகுமார் அடக்கமாகவும் யாவரிடமும் இனிமையாகவும் பழக ஆரம்பித்தான்.

கொலுவில் இருந்த பொம்மைகளில் காந்தி பொம்மையே அவனைப் பெரிதும் கவர்ந்தது. ''காந்தியின் பொம்மைக்கே இவ்வளவு கவர்ச்சியும் சக்தியும் இருக்கிறதே. உண்மையான காந்திக்கு எவ்வளவு கவர்ச்சியும், சக்தியும் இருந்திருக்கும்'' என்று எண்ணி வியந்தான் நந்தகுமார்.



காந்தி பொம்மை

கல்யாணி சேஷாத்திரி

கோட்டைகளால் சூழப்பட்ட விசித்திரபுரி அரண்மனை நகரத்திலிருந்து ஒதுங்கி யிருந்தது. மக்களிடமிருந்து மன்னர்கள் எப்படி ஒதுங்கி வாழ்வார்களோ அப்படியே அவர்களுடைய அரண்மனைகளும் அந்தக் காலத்தில் மக்கள் வசிக்கும் இடங்களிலிருந்து தனித்துத்தான் இருக்கும். விஸ்தாரமான நிலப் பரப்பில் தோட்டங்களால் சூழப்பட்ட அத்தனை பெரிய அரண்மனைக் கோட்டையில் இப்போது கீர்த்தி மட்டுமே தன்னந் தனியனாக இருந்

மந்திரக் கம்பளம்

5



தான். அத்தனை பெரிய மாளிகையில் தான் மட்டுமே இருக்கிறோம் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் என்னவோ செய்தது. அது பயமில்லை. ஆனால் ஒருவித பாரமாக இருந்தது.


அரண்மனையின் ஒவ்வோர் அறையாக ஓடி ஓடிப் பார்த்தான். யாருமே இல்லை. எந்த விதமான பொருள்களுமில்லை. களைப்பையே அறியாத கீர்த்திக்குக் களைப்பாக, கலக்கமாக இருந்தது. பசியைப் பற்றி அதிக அக்கறை காட்டாத கீர்த்தியை இன்று ஏனோ அது பாடாகப் படுத்தியது. அவன் பரிதாப நிலையைக் கண்டு வானமே அழுவது போல் திடீரென்று இடியோடு மழை கொட்டியது. காலியான அரண்மனையில் இங்குமங்குமாக ஓடிக் கொண்டிருந்த கீர்த்தி மழையில் நனையாதிருக்கத் திரைச் சீலை ஒன்றை உருவித்

கல்பனா—



தலைமேல் போட்டுக் கொண்டு ஓடினான். ''அடேயப்பா! அரண்மனைதான் எத்தனை பெரியது? இத்தனை அறைகளா? இன்னும் நான் பார்க்க வேண்டிய பகுதிகள் நிறைய இருக்கின்றனவே!'' என்று தன்னைச் சூழ்ந்திருக்கும் உப்பரிகைகளையும் கூட கோபுரங்களையும் மாடமாளிகைகளையும் வியப்புடன் அண்ணாந்து பார்த்தான் கீர்த்தி. இதுவரை அவன் அரண்மனை முழுவதையும் சுற்றிப் பார்த்ததில்லை. அதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை.

கோட்டையின் வடக்கு வாயில் பக்கமாகத் தன்னந் தனியாக ஓர் உப்பரிகை தெரிந்தது. அங்கு அவன் போனதே இல்லை. 'என்னிடம் வா' என்று அழைப்பது போலிருந்தது நீல வானத்தின் பின்னணியிலே நிமிர்ந்து நின்ற அதன் கோபுரம். இலேசாக மழை பெய்து கொண்டிருந்தது. திரைச் சீலையை முட்டாக்காகத் தலைமீது போட்டு அதையே உடல் மீதும் மூடிக் கொண்டு வடக்குக் தான். அவன் கொடுத்த உதையில் கதவு சுவரில் போய் மடார் என்று மோதியது. அதனால் ஏற்பட்ட சத்தம் அந்தக் காலி அரண்மனையினுள் அலை அலையாகப் பரவிப் பயங்கரமாக எதிரொலி செய்தது. உப்பரிகைக்குப் போக மாடிப் படிகள் கொடியாக வளைந்து சென்றன. இருள் மண்டிக் கிடந்தது என்று சொல்லி விட முடியாதபடி இலேசாக மங்கலான ஒளி எங்கிருந்தோ




வாண்டு மாமா

கோட்டை மதில் மீதிருக்கும் உப்பரிகையை நோக்கி ஓடினான் கீர்த்தி. கோட்டையில் காவல் இல்லை. அதன் பழங் காலத்துக் கதவு காற்றில் தானாக அசைந்து கொண்டிருந்தது. எண்ணெய் இடப்படாத அதன் கீல்கள் 'கிய்கிய்' என்று சப்தமிட்டன. நிர்மானுஷ்யமான அந்த அரண்மனையில் அந்த ஒளியே அமானுஷ்யமாக இருந்தது. வேறு யாராவதாக இருந்தால் பயத்தினால் பாதி உயிர் போயிருக்கும். ஆனால் கீர்த்தி பயம் என்றால் என்ன என்றே அறியாதவன். பிரும்மாண்டமான அந்த மரக் கதவைக் காலால் ஓர் உதை கொடுத்து அகலத் திறக்க வைத் வந்து கொண்டிருந்தது. கீர்த்தியின் உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்வு 'மாடிக்குப் போ' என்று பிடித்துத் தள்ளியது. படிகளில் கால் வைத்தான். முகத்தில் கம்பியாக ஒட்டடைகள் வந்து சிக்கிச் சிதைந்தன. சிலந்தி வலைகளைக் கைகளால் ஒதுக்கி வழிஏற்படுத்திக்கொண்டு மேலே ஏறினான் கீர்த்தி. படியெல்லாம் புழுதி. காலடி ஓசை கேட்டு ஓடும் எலிகள், பல்லிகள். 'இந்த உப்பரிகை புறக்கணிக்கப்பட்ட இடமா? பல காலமாக இங்கு யாருமே வந்ததில்லை போலிருக்கிறதே' என்று சிந்தித்தபடியே படிகளைக் கடந்து உச்சிக்குப் போனான் கீர்த்தி. அங்கு அவன் முன்னால் ஒரு பழங்காலத்து மரக் கதவு. காலத்தால் அதன் தோற்றம் சிதைந்து போயிருந்தது. அது மூடியிருந்தது. ஆனால் பூட்டியிருக்கவில்லை.

அதன் கீல்களில் துரு ஏறியிருந்ததால் அதைச் சுலபமாகத் திறக்க முடியவில்லை. கீர்த்தி அதை அழுத்தித் தள்ளிய போது விகாரமான ஒலி எழுப்பி ஒதுங்கிக் கொண்டது அந்தக் கதவு. உள்ளே....?

காலைச் சூரியனின் பளீர் ஒளியை உள்ளே நுழைய விடாமல் அந்த அறையில் மண்டிக் கிடந்த ஒட்டடைகளும் சிலந்தி வலைகளும் தடுத்துக் கொண்டிருந்தன. சின்ன அறைதான். ஒரே ஒரு மாடம்தான், அதுவும் சுவரின் மேல் மட்டத்தில் இருந்தது. அறையின் நடுவே ஒரு பெரிய மேஜை கிடந்தது. அதில்...?

கீர்த்தியின் கண்கள் வியப்பினால் விரிந்தன. அத்தனை பெரிய அரண்மனையில் எத்தனையோ அறைகளில் ஓடி ஓடித் தேடினான் ஒரு பொருளும் இல்லை. ஆனால் இங்கு....? இதை ஒழித்துக் கொண்டு போக மறந்து விட்டார்களா? வடக்குக் கோட்டை வாசலின் மதில் மீதுள்ள உப்பரிகை அவர்களின் நினைவுக்கு வரவில்லையா? அந்த மேஜை மீதும் தரையிலும்தான் எத்தனை பொருள்கள்! எல்லாம் சிதறிக் கிடந்தன, குப்பையாக அள்ளிக் கொண்டு வந்து போட்டதைப் போல. மேலங்கிகள், பாதரட்சைகள், உடைவாள்கள்; தலையணிகள், ரத்தினக் கம்பளங்கள், விளக்குகள், முத்துமாலைகள், குல்லாய்கள். தூசி படிந்து பழசாகி இருந்தாலும் பயன்படக் கூடிய நிலையில் இருந்தன அத்தனையும். அதுமட்டுமல்ல. கீர்த்தி வர்மனுக்கென்றே அளவெடுத்துத் தயாரித்தது போலவும் அவை இருந்தன. அவற்றின் மேலாக ஒரு தொப்பி சற்று விநோதமாக இருந்தது. கீர்த்தி அதை எடுத்துத் தட்டினான். அழகான ஒரு பறவை இறகு செருகப்பட்டு மிகவும் எளிமையாகக் காட்சியளித்தது அந்தக் குல்லாய்.. அதைத் தலையில் அணிந்து கொண்டான். ஒரு மூலையில் ஒரு ஜோடிக் காலணிகள் வைக்கப் பட்டிருந்தன. தன் காலிலிருந்த செருப்புக்களைக் கழற்றி உதறிவிட்டு அந்தப் புதிய காலணிகளை அணிந்து கொண்டான். அது பளபளப்பாக இல்லை. ஆனால் அவன் காலுக்குக் கச்சிதமாக அள




வெடுத்தாற்போலிருந்தது. அதுமட்டுமல்ல. அதை அணிந்து கொள்ளவேண்டும் என்ற ஒரு வேகமும் ஏற்பட்டது, அவன் மனத்தில்.

மேஜை மீது பார்வையை ஓடவிட்டான். இளவரசர்கள் உல்லாசப் பயணம் போகும்போது கையில் எடுத்துச் செல்லும் பணப் பை ஒன்று இருந்தது. கீர்த்தியிடம் இப்போது சல்லிக் காசு கூடக் கிடையாதே. 'பணமில்லாவிட்டால் என்ன? இந்தப் பணப் பையை எடுத்துக் கொள்வோம்' என்று அதை எடுத்துத் தட்டினான். 'கிணிங்' என்ற ஓசை கேட்டது. ஆவலுடன் அதில் கை விட்டான். மூன்று பொற்காசுகள் பளபளத்தன. கீர்த்திக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. பையின் அருகிலே ஓர் அழகான பட்டாக் கத்தியும் இருந்தது. பணம் கிடைத்த சந்தோஷத்தில் அந்தக் கத்தியையும் எடுத்துக் தன் இடையில் கட்டிக் கொண்டான். நல்ல வேலைப்பாடுடைய உறையினுள் ஒப்பற்ற வாள் ஒன்று உறங்கிக் கொண்டிருந்தது. இன்னும் அந்த அறையினுள் ஏதேதோ பொருள்கள் எல்லாம் இறைந்து கிடந்தன. ஆனால், கீர்த்தி அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. கையிலே காசு கிடைத்து விடவே அவன் வயிற்றுப் பசி தீவிரமடைந்தது. வெகு வேகமாகக் கீழே இறங்கி வந்தான்.

அந்த அறையைப் பற்றியோ அதில் குவிந்திருந்த பொருள்களைப் பற்றியோ அதன் அதிசய சக்திகளைப் பற்றியோ அவனுக்கு ஏதும் தெரியாது. கீர்த்திவர்பன் பிறந்தபோது அவனுடைய அம்மாவின் உதாசீனத்தினால் புறக்கணிக்கப்பட்ட சக்தி வாய்ந்த மந்திரவாதிகளும், தவயோகிகளும், முனிவர்களும் திடீரென்று தோன்றி விருந்துண்டு வாழ்த்தி வழங்கி விட்டுப் போன பொருள்கள்தான் அவைகள் எல்லாம். அவர்களிடமுள்ள வெறுப்பினாலும் மந்திர தந்திரங்களில் நம்பிக்கை இல்லாததினாலும் ராணி ரத்தினவதி அந்த மந்திரப் பொருள்களை யெல்லாம் ஒட்டுமொத்தமாகக் குப்பை போல அள்ளிக் கொண்டு போய் வடக்குக் கோட்டை உப்பரிகையில் உள்ள ஓர் அறையில்









போட்டு மூடிவிட்டு வரும்படி ஆணை யிட்டாளல்லவா? அதன் பிறகு யாரும் அங்கு போகவில்லை. இப்போது கீர்த்தி தான் அங்கு போனான். அவனுக்காக அளிக்கப்பட்ட அவனுடைய உடைமைகள்தானே அவை? சரியான சமயத்தில் அவைகள் அவனை வந்தடைந்து விட்டன. இப்போது அவன் அணிந்து கொண்டிருக்கும் குல்லாய் எப்படிப் பட்டது தெரியுமா? அதை அணிந்து கொண்டவர்கள் யார் கண்களுக்கும் தென்பட மாட்டார்கள். ஆனால் அவர்களால் எல்லாரையும் பார்க்க முடியும். பிறர் பார்வையில் படாமல் மாயமாக மறைந்திருந்து உலாவலாம். கீர்த்தி அணிந்திருந்த பாதரட்சைகளோ ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்களை ஒரே தாவலில் கடக்கும் ஆற்றல் படைத்தவை. அதை அணிந்து கொண்டு வெகு தொலைவில் உள்ள இடத்துக்குப் போக வேண்டும் என்று நினைத்தால் போதும். கணத்திலே அங்கு கொண்டு விட்டுவிடும். கீர்த்தியிடமுள்ள பணப் பையின் மகத்துவம்? அதில் உள்ள அந்த மூன்று தங்க நாணயங்களும் வளர்ந்து கொண்டே இருக்கும். அதற்குள் கைவிட்டு எடுக்க எடுக்கக் குறையாது. அந்த வாள்...? அதுவும் யந்திர சக்தியுடைய வாள்தான். அது சரி, இந்தப் பொருள்களின் சக்தியைப் பற்றியெல்லாம் கீர்த்திக்குத் தெரியுமா? தெரியாது. அவைகளின் அபூர்வ சக்திகளைப் பற்றி ஏதும் அறியாதவனாகவே அவன் விசித்திரபுரி அரண்மனையின் முற்றத்திலே நின்றான். உங்களால் ஏன் யாராலுமே இப்போது அவனைக் காண முடியாது. அவன் தலையில் உள்ள அந்த மந்திரக் குல்லாய் அவனைப் பிறர் கண்களுக்குத் தெரியாமல் மாயமாக மறைத்திருந்தது. ஆனால் தன் உருவத்தைப் பிறரால் காண முடியாது என்ற ரகசியம் கீர்த்திக்குத் தெரியாது. இந்த நிலையில்தான் பல குழப்படிகள் நடந்தன.

கீர்த்திக்குப் பசித்தது. பையிலுள்ள தங்க நாணயங்களைத் தடவிப் பார்த்துக்கொண்டதும் அவன் பசி பலமடங்காயிற்று. அரண்மனைச் சமையலறையோ காலி. விசித்திரபுரியின் கடைத் தெருவுக்குப் போய் ஏதாவது ஓர் உணவு விடுதியில்... கீர்த்திக்குச் சட்டென்று ஒரு காட்சி நினைவுக்கு வந்தது. மந்தஹாசரின் ஆட்சிக்கு உட்பட்டது மங்களகிரி என்ற நாடு. ஒரு தடவை எதற்காகவோ அங்கு போயிருக்கிறான் கீர்த்தி. அப்போது அங்கிருந்த ஓர் உணவு விடுதியில் விருந்து கொடுத்தார்கள் இளவரசனுக்கு. 'ஆகா அத்தனை சுவையான பதார்த்தங்களை நான் அதன் பிறகு சாப்பிட்டதே யில்லை. எத்தனை அருமையாகப் பக்குவம் செய்யப்பட்ட உணவுகள்! விசித்திரபுரிக்காரர்களுக்கு விருந்தாளிகளை வரவேற்கவும் தெரியாது, சுவை மிக்க உணவு வகைகளைப் பக்குவம் செய்து தரவும் தெரியாது' என்று எண்ணிப் பெருமூச்சு விட்ட கீர்த்தி ''இந்தப் பசிக்கு நான் மட்டும் மங்களகிரியில் இருந்தேனானல் எத்தனையோ இன்சுவை உண்டிகளை உண்டு மகிழலாமே'' என்று எண்ணினான். அடுத்த விநாடி...?

என்ன நடந்திருக்கும் என்றுதான் உங்களுக்குத் தெரியுமே. கீர்த்தி அணிந்திருந்தது மந்திரப் பாதுகையாயிற்றே. ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்கள் பாயக்கூடிய வல்லமை உள்ளதாயிற்றே! கண் மூடித் திறப்பதற்குள் கீர்த்தி, தான் மங்களபுரியின் புகழ் பெற்ற உணவு விடுதியின் முன்னால் நிற்பதை அறிந்து ஆச்சரியப்பட்டுப் போனான். விசித்திரபுரியிலிருந்து எண்பத்தி ஏழு மைல்கள் தொலைவில் உள்ள மங்களகிரிக்கு எப்படி மாயமாக வந்தோம் என்று பிரமிப்பு ஏற்பட்டாலும் அதை எண்ணிக் குழப்பிக் கொள்ளவில்லை கீர்த்தி. காரணம் அவன் பசி. அத்துடன் அற்புதங்களில் அவநம்பிக்கை உள்ள அறிவாளியாயிற்றே அவன்!

உத்சாகமாக உணவு விடுதியினுள்ளே நுழைந்தான் இளவரசன் கீர்த்தி. ஆனால் யாருமே அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. விசித்திரபுரி சாம்ராஜ்யத்தின் இளவரசனான அவன் சென்ற தடவை இங்கு வந்திருந்தபோது எத்தனை மரியாதை? எத்தனை வரவேற்பு? 'நகரம் விழாக் கோலம் பூண்டிருந்ததே. என்னைக் காண்பவரெல்லாம் தலை வணங்கி முகமன் கூறினார்களே. அப்படிப்பட்டவர்களுக்கு இன்று என்னைத் தெரியவில்லையா? மறந்து விட்டார்களா?' என்று சிந்தனை செய்தபடியே காலியாக இருந்த ஒரு மேஜை முன்னால் போய் அமர்ந்து கொண்டான். தான் அணிந்துள்ள மாயக் குல்லாய் தன் உருவத்தைப் பிறர் காண முடியாதபடி மறைத்திருக்கிறது என்பதை அவன் அறியவில்லை. அவனால் மற்றவர்களைக் காண முடிந்தது. ஆனால் பிறர் கண்களுக்கு அவன் தெரியவில்லை.

மேஜை அருகில் அமர்ந்த கீர்த்தி அங்கு உண்பவர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருப்பவனைக் கூப்பிட்டான். தனக்கு வேண்டிய பதார்த்தங்

களைக் கூறி, கொண்டு வரச் சொல்லுவதற்காக. இவன் அதிகாரக் குரல் கேட்டு அங்கிருந்தவர்களும் உணவு பரிமாறுபவனும் திடுக்கிட்டுத் திகைத்துச் சுற்று முற்றும் பார்த்தார்கள்.. ஆனால் கீர்த்தியின் பக்கம் யாரும் திரும்பவில்லை. கால் மீது கால் போட்டுக்கொண்டு கம்பீரமாக அமர்ந்திருக்கும் இளவரசனை அவர்களில் யாருமே கண்டுகொள்ளவில்லை. மரியாதை செலுத்தவில்லை. கூப்பிட்ட அவனிடம் 'என்ன?' என்று கேட்டுப் பணியாளன் வரவில்லை. . காரணம், கீர்த்தி தன் தலையிலிருந்த குல்லாயைக் கழற்றாததுதான்!

உண்மையை அறியாத இளவரசனின் எண்ணமோ வேறு மாதிரியாகச் சென்றது. ''என்னை இப்படி இவர்கள் அலட்சியம் செய்து அசட்டையாக இருப்பதற்குக் காரணம் அப்பாதான். என்னுடன் யாரும் பேசக் கூடாது. எனக்கு எவ்வித உதவியோ உபசரணையோ செய்யக் கூடாது என்று நாடெங்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். மீறுகிறவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று மிரட்டப் பட்டிருப்பதனால்தான் இவர்கள் இப்படி என்னிடம் அசட்டையாக இருக்கிறார்கள். இதனால் நான் பட்டினி கிடக்க வேண்டுமா என்ன?'' இப்படி எண்ணிய கீர்த்தியின் பசியை அந்த உணவு விடுதியின் சுவை மிக்க உணவுப் பொருள்களின் 'கமகம' மணம் 'பகபக'வென்று கிளப்பி விட்டது. பல்சுவைப் பண்டங்களும் விடுதியின் ஒரு பக்கம் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. வேண்டியவர்களுக்கு, வேண்டியவற்றை அந்தக் குவியலிலிருந்து எடுத்து வந்து பரிமாறினார்கள் பணியாளர்கள். கீர்த்தியை யாரும் கவனிக்கவும் இல்லை. அவன் மேஜை அருகே வரவும் இல்லை. இதனால் கீர்த்திக்குக் கோபம் வந்தாலும் அதை அடக்கிக் கொண்டான். அவன் அறிவாளியாயிற்றே. மௌனமாக எழுந்து போனான்.

சற்றைக் கெல்லாம் அங்கு கூடி உணவு அருந்திக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் எடுத்த கவளத்தை வாயிலிடாமல், வாயிலிட்ட பண்டத்தை மென்று விழுங்காமல் பிரமிப்பும் திகைப்பும் கொண்டவர்களாகக் கிலி பிடித்துச் சிலை போலானார்கள். ஏன்?

உணவுக் குவியலின் அருகிலிருந்து ஒரு பெரிய தட்டு தானாக அந்தரத்திலே நின்றது. அதில் இட்டிலிக் குவியலிலிருந்து நான்கு இட்டிலிகள் போய் உட்கார்ந்தன. வடைகள் சில நர்த்தனமாடியபடி தட்டை நோக்கிப் போயின. அப்பமும் அதிரசமும், கொழுக்கட்டைகளும் முறுக்கும் ஒன்றையொன்று பின்தொடர்ந்து அந்தரத்திலே நிற்கும் தட்டிலே போய் அமர்ந்து கொண்டன. ஒரு தம்ளர் தானாக எழும்பிப் போய்த் தவலைக்குள் மூழ்கி நீருடன் அந்த உணவுத் தட்டினருகே போய் அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டது. இத்தனையும் நிகழ்ந்தானதும் பதார்த்தங்கள் நிறைந்த உணவுத் தட்டும் நீர்க் குவளையும் காலியாக இருந்த மேஜை மீது போய் அமர்ந்தன. பிறகு அதிலிருந்த பண்டங்கள் விள்ளல் விள்ளலாக அதிலிருந்து கிளம்பி மாயமாக மறைந்தன! ஆனால் மனிதர்கள் யாரையும் அவர்கள் பார்க்கவில்லை. இப்படியொரு காட்சியை நீங்கள் காண நேர்ந்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அதே நிலையில்தான் மங்களகிரி உணவு விடுதியிலுள்ள மக்களும் திக்பிரமை பிடித்துப் போயிருந்தார்கள். இளவரசன் கீர்த்தி அவர்கள் கண்களுக்குத் தெரியவில்லை. தான் பிறர் பார்வைக்குத் தெரியாதபடி இருக்கிறோம் என்பது கீர்த்திக்குத் தெரியவில்லை. அந்தரத்திலே தட்டும், உணவுப் பொருள்களும் தண்ணீர் குடுவையும் கிளம்பிப் போய் மறைந்த மாயத்தைக் கண்டு கிலி பிடித்தவர்களானார்கள். ஆனால் கீர்த்தியோ இதையொன்றையும் கவனியாதவனாக ரசித்துச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

கோகுலம் கையெழுத்துப் போட்டியில் பங்கு கொண்ட எல்லாக் குழந்தைகளுக்கும் நமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரியன. பரிசு பெற்றவர்கள் விவரம் அடுத்த இதழில்.



தெரியுமா?



1198. கீழ்க்கண்ட நாடுகளில் ஸ்காண்டிநேவியாவில் இல்லாதது எது? ஹாலந்து, நார்வே, டென்மார்க், ஸ்வீடன்.

1199. டோக்கியோ நகரம் எந்தக் கடலைப் பார்த்துக் கொண்டிருக்கிறது?

1200. கம்பளி உற்பத்தியில் உலகில் முதல் இடம் வகிக்கும் நாடு — நியூஸி லாந்து, ஆஸ்திரேலியா, தென் அமெ ரிக்கா, பிரேஸில் — இவைகளில் எது?

1201. கீழ்க்கண்ட மரங்களில் எந்த மரம் மிகவும் உறுதியானது? ஓக், வால்நட், தேக்கு, பைன்.

1202. மட்டன், போர்க், பீஃவ், வென்சன் — இவை மாமிச உணவு வகைகள். ஒவ்வொன்றும் எதன் எதன் இறைச்சி என்று தெரியுமா உங்களுக்கு?

1203. இந்தியாவின் பூர்வகுடிகளாக இன்று யார்யாரைக் குறிப்பிடுகிறார்கள்.

1204. பாக்தாத், கோலேன் நக ரங்கள் எந்த நதிக் கரையில் உள்ளன?

1205. கான்யான் (Canyon) என் பது பெரிய துப்பாக்கி, மலைத் தொடர், குறுகிய ஆழமான பள்ளத்தாக்கு, நீர் வீழ்ச்சி — இவற்றில் எது?

1206. கிழக்கிந்தியக் கம்பெனி இங்கி லாந்தில் தொடங்கப்பட்டது எந்த ஆண்டு தெரியுமா?

1207. செஸ் பலகையில் மொத்தம் எத்தனை கட்டங்கள் இருக்கின்றன? 24, 48, 50, 64.

1208. ரோமனியர்களின் யுத்தக் கடவுளின் பெயர் என்ன?

1209. தெர்மாமீடர், பரோமீடர், ஹைக்ரோ மீடர், ஹைட்ரோ மீடர்— இவைகளில் உஷ்ணத்தை அளக்க உப யோகப்படுவது எது?

1210. கலாஹாரி, கோபி, ஸஹாரா, அராபியன் — இவைகள் எதைக் குறிக் கின்றன?

1211. (a) பெண் தலையும் சிங்க உடலும், (b) பெண் உடலும் மீன்காலும் (c) பாதி மனிதனும் பாதி குதிரையுமான உருவங்களில் வரும் மேலை நாட்டு இதிகாசப் பாத்திரங்களின் பெயர்கள் என்ன?

1212. எந்த இரு கடல்களை சூயஸ் கால்வாய் இணைக்கிறது?

1213. கிழக்கிந்தியக் கம்பெனி இந்தி யாவில் தங்கள் பண்டகசாலைகளை அமைத்து வர்த்தகம் செய்வதற்கு மொகலாயர்களிடம் யார் மூலம் அனு மதி கேட்டது. எந்த ஆண்டில்?

1214. சூரியனிலிருந்து வெகு தொலைவில் உள்ள கிரகம் எது?

1215. கீழ்க்கண்ட உலோகங்களை உருவாக்க எதற்கு மின் சக்தி மிக அதிகமாகத் தேவைப்படும்? உருக் கிரும்பு, அலுமினியம், தகரம், தாமிரம்

1216. கடல்களிலேயே மிக ஆழ மானது எது?

1217. ஒரு கிலோமீடருக்கு எத் தனை மீடர்கள்?

1218. பம்பாயைக் கிழக்கிந்தியக் கம்பெனி வாங்கியது எந்த ஆண்டில்?

1219. ஹங்கேரியின் தலைநகர் புகாரெஸ்ட், புடாபெஸ்ட், பெல் கிரேடு, வார்ஸா — இவற்றில் எது சரி?

1220. இங்கிலாந்தை 1900-ல் ஆட்சி புரிந்தவர் ஏழாம் எட்வர்டு, எட்டாம் எட்வர்டு, விக்டோரியா, ஐந்தாம் ஜார்ஜ் — இவர்களில் யார்?

1221. ராண்டு (Rand) மார்க்ஸ் (Marks) டிராசேம் (Drachame) ரூபிள் ஆகியவைகளை நாணயங்களாக எந்த எந்த நாட்டில் பயன்படுத்துகிறார்கள்?


1222. கீழ்க்கண்ட ஊர்களில் ஒன்று கங்கைக் கரையில் உள்ளது அது எது? அகமதாபாத், ஹைதராபாத், அலகா பாத், நிஜமாபாத், ஔரங்காபாத், சிக் கந்தராபாத்.

தெரியுமே!



1198. ஹாலந்து. 1199. பஸிபிக். 1200 ஆஸ்தி ரேலியா. 1201. தேக்கு. 1202. மட்டன்-ஆட்டிறைச்சி; போர்க்-பன்றி இறைச்சி; பீஃவ் (Beef)-மாட்டிறைச்சி; வென்சன் - மான் இறைச்சி. 1203. சாந்தலர்கள், தோடர்கள், அந்தமானில் வாழும் சுதேசிகள் ஆகி யோரை. 1204. பாக்தாத் - டிக்ரீஸ்நதிக் கரையில்; கோலேன் - ரைன் நதிக்கரையில். 1205. குறுகிய ஆழமான பள்ளத்தாக்கு (A deep narrow valley). 1206. 1600-ல். 1207. 64 கட்டங்கள். 1208. மார்ஸ். 1209. தெர்மா மீட்டர். 1210. பாலைவனங்களை. 1211. (ஏ) ஸ்பீனிக்ஸ் (பி) மெர்மைட் (சி) ஸென்டார். 1212. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும். 1213. சர் தாமஸ் ரோ என்பவர் மூலம் 1615-18ம் ஆண்டு களில். 1214. புளூடோ. 1215. அலுமினியத்துக்கு. 1216. பஸிபிக். 1217. ஆயிரம். 1218. 1668-ல். 1219. புடாபெஸ்ட். 1220. விக்டோரியா. 1221. ராண்டு- தென் அமெரிக்கா, மார்க்ஸ் - ஜெர்மனியிலும் பின் லாந்திலும், டிராசேம்-கிரீஸ், ரூபிள் - ரஷ்யா. 1222. அலகாபாத்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன் ப்ரைவேட் லிமிடெட் நிறுவனத் துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


சரியான வேளையில் சரியான வேலை...
அப்பா! இன்னிக்கி எங்க ஸ்கூல்லே கிரிக்கெட் மாட்ச் நடந்தது. என்னை சீக்கிரம் 'அவுட்' ஆக்கிப்புட்டாங்க!
அதெப்படி ராமு ?... என்னாச்சு ?...
மணி வீசிய 'ஷார்ட் பால்'ஐ நான் 'கட்' செய்யப் போனேன். ஆனா பந்து 'பாட்'டின் விளிம்பில் பட்டு எழும்பி, நேரே விக்கெட் கீப்பரின் கையிலே சிக்கிடுச்சு.
அப்படியா? ஆனால், 'ஷார்ட் பால்' அடிக்க பலவித 'ஸ்ட்ரோக்'குகள் இருக்கே! உதாரணமாக, 'ஹூக்' அடிக்கலாம். நீ சிறிது வலது பக்கம் நகர்ந்து, பந்து உன்னுடைய இடது பக்கம் உயரே வரும்படி நின்றுகொள். பந்து வந்ததும் 'பாட்'டை மேல்புறம் சுழற்றி அடி...
முழு பலத்துடன் அடித்தால், நீ முழுவதும் திரும்பி, விக்கெட்கீப்பருக்கு நேரிலே வந்துவிடுவாய்!
சரி, மணி எட்டரை ஆகிவிட்டது. போய் படுத்துக்கொள்... பல் துலக்கிவிட்டாயல்லவா?
ஓ! சாப்பிட்டவுடனே வாயைக் கொப்பளித்து விட்டேன், அப்பா!
அது போதாது ராமு. பற்களைச் சிதைக்கும் உணவுத் துகள்களை நீக்கும் பொருட்டு, இரவும் பகலும் பற்களைத் துலக்க வேண்டும், அதோடு ஈறுகளையும் தேய்த்துப் போஷிக்க வேண்டும் — அவற்றை ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வைத்திருக்க இதுவே வழி.
சரி, அப்பா.
வா, நாமிருவரும் ஃபோர்ஹன்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
FOR THE GUMS
ஃபோர்ஹன்ஸ்:
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

49F-203R-TAM

சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!

இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி; மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் ததாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய்-400001



